விலை ரூபா: 15.00

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 15 வியாழக்கிழமை (30.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 193

ரா மி கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## மனித உரிமை மீறலை விசாரிக்காவிடின் சர்வதேச விசாரணை ஏற்படுத்தப்படும்

### அமெரிக்கா எச்சரிக்கை



(வாஷிங்டன்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன்னிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் இக்கடமைப்பாட்டை நிறைவேற்றத் தவறினால் சுயாதீனமான சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உலக நாடுகளுக்குஏற்படும்எனவும்கொழும்பை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபடைந்ததன் பின்னர் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு நிகரானதாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளு (19ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பிரச்சினையில் அவசரம் காட்ட முடியாது

### இந்தியப் பிரதமர் அறிவிப்பு



(புதுடில்லி)

இலங்கைப் பிரச்சினைகளில் அவசரம் காட்ட முடியாது எனவும் மிகுந்த கவனத்துடனும் பொறுமையுடனும்தான் எதையும் அணுக வேண்டும் எனவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். புதுடில்லியில் நேற்று அவர் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ் ஆகிய அண்டை நாடுகளுடனும் அவ்வாறான போக்கினை கடைப்பிடிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவில் ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாவற்கொடிச்சேனை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் சில நேற்று புதன்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு ஊரசரி பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று இன்றைய தினம் நடத்தப்படவுள்ளது. கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நாம் இலங்கையர் அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் தொடர்பில் அரசு வெளியிடும் மாறுபட்ட தகவல்கள், அவர்கள் விடுதலை செய்ய காலம் தாமதித்தல் மற்றும் அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கைதிகளின் உறவினர்கள், மனித (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையுடன் உறவுபேண பிரிட்டன் விருப்பம்

(லண்டன்)

இலங்கையுடன் நேர்மையான உறவுகளை பேணுவதற்கு விரும்புவதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

குற்றச்செயல்களுக்குதண்டனை வழங்குவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் இந்த ஆண்டின் இறுதிக்குள் ஏதேனும் அபிவிருத்தியை எட்ட வேண்டுமென தென்ஆசிய நாடுகளுக்கான பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டயர்பேர்ட் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து பிரித்தானியா (19ஆம் பக்கம் பார்க்க)

## 600 முன்னாள் போராளிகள் இவ்வார இறுதியில் விடுதலை

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற்ற 600 விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் இவ்வார இறுதியில் விடுதலை செய்யப்படவுள்ளனர். இதற்கான விசேட நிகழ்வு வவுனியாவில் இடம்பெறவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுகந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புனர்வாழ்வு ஆணையாளர் கூறுகையில்,

யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்களை சமூகத்துடன் இணைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (20ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்றச்சாட்டுத் தொடர்பில் பதிலளிக்கும் பொறுப்பு பசிலிடம்!

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை தயாரிப்பு

(கொழும்பு)

வன்னியில் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்புவதற்கான பொறுப்பு பசில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் அது குறித்த குற்றச்சாட்டுகளுக்கு அவரே பொறுப்புக் கூறவேண்டும் என்ற தொனியில் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளதாக தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் (19ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான சூழலை குழப்ப வெளிநாட்டு சக்திகள் முயற்சி

### அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போர் முடிபுக்கு கொண்டுவரப்பட்டு மூவின மக்களும் ஒற்றுமையுடன் வாழ முற்படும் இச்சந்தர்ப்பத்தில் அவற்றைக் குழப்ப சில வெளிநாட்டு சக்திகள் முயற்சிப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைக் குழப்ப வெளிநாடுகளில் தங்களுடைய பிள்ளைகளை மேற்படிப்புக்காக அனுப்பி (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய உளவுத்துறையின் பேச்சை நம்பி பொன்சேகாவை எதிரியாக்கிவிட்டேன்!

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவலை



(கொழும்பு)

இந்திய உளவுத்துறையின் சதி காரணமாகவே தானும் ஜெனரல் சரத் பொன்சேகாவும் எதிரிகளாக நேர்ந்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மனந்திறந்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டு சிறிது காலத்துக்குள்ளாகவே இராணுவத் தளபதி பதவியிலிருந்து சரத் பொன்சேகாவை நீக்கியது தான் செய்த தவறு என்று ஏற்றுக் கொண்டிருக்கும் (20ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஈழத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் இரட்டை முகம் அம்பலம்

## சீமான் அறிக்கை



(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இந்தியா தங்களை நிர்ப்பந்திக்கவில்லை என்று இலங்கை அதிபர் ராஜபக்ஷ கூறியுள்ளது இந்தியாவின் இரட்டை முகத்தை அம்பலப்படுத்துகிறது என்று கூறி நாம் தமிழர் கட்சியின் தலைவர் செந்தமிழன் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையில் இலங்கை சென்ற இந்திய அரசகுழு, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு எந்த நிர்ப்பந்தத்தையும் தங்களுக்கு அளிக்கவில்லை என்று அந் நாட்டு அதிபர் மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் கொழும்பு சென்ற சிவ்சங்கர் மேனன், வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் ஆகியோர் கொண்ட இந்தியக் குழு இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியது. இரண்டு மணி நேரத்திற்கு மேல் அச் சந்திப்பு நீடித்ததாகக் கூறப்பட்டது.

இச் சந்திப்பிற்குப் பிறகு கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய சிவ்சங்கர் மேனன் இலங்கை இனப்பிரச்சினைக்கு தமிழர்களுடன் சேர்ந்து ஒரு அரசியல் ஏற்பாட்டை உருவாக்கவேண்டும். அதனை உடனடியா விரைவாகச் செய்யவேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளோம் என்று கூறியதாக இந்தியாவின் ஊடகங்களில் செய்திகள் வந்தன.

ஆனால் கொழும்பிலிருந்து வெளியான செய்திகள் இதற்கு நேர் முரணாக இருந்தது. தமிழர் பிரச்சினைக்கு தங்களுக்கு உகந்த ஒரு அரசியல் தீர்வை காணவேண்டியது இலங்கை அரசின் பொறுப்பு. அந்த விவகாரத்தில் இந்தியா எந்த விதத்திலும் தலையிடாது என்று சிவ்சங்கர் மேனன் கூறியதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

இந்த முரண்பாட்டை ஜூன் 12ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் நாம் தமிழர் கட்சி சுட்டிக்காட்டியிருந்தது.

அதனை நிரூபிக்கும் வண்ணம் கொழும்பில் அதிபர் மகிந்த ராஜபக்ஷ அளித்த பேட்டி அமைந்துள்ளது. சிறுபான்மைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வை அளியுங்கள் என்று எந்த நிர்ப்பந்தத்தையும் இந்தியா கொடுக்கவில்லை. இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13-வது பிரிவை நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் இந்தியா நிர்ப்பந்திக்கவில்லை என்று ராஜபக்ஷ தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்.

சிவ்சங்கர் மேனன் தலைமையில் கொழும்பு வந்த இந்தியக் குழு என்னதான் பேசியது என்று கேட்டதற்கு எப்போதும் பேசப்படும் இரு தரப்பு உறவுகள் தொடர்பான விடயங்கள்தான் பேசப்பட்டன என்று ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு எப்படிப்பட்ட ஏமாற்று நாடகத்தை நடத்தி வருகின்றது என்பதை சிவ்சங்கர் மேனனின் இலங்கைப் பயணத்திலிருந்து தமிழக முதல்வர் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினையை மற்ற மாநில அரசுகளின் முதல்வர்களிடமும் அரசியல் கட்சிகளின் தலைவர்களிடமும் தமிழக முதல்வர் கொண்டு சென்று மத்திய அரசிற்கு ஓர் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கை தொடர்பான இன்றைய மத்திய அரசு கடைப்பிடித்துவரும் வெளியுறவுக் கொள்கை இந்தியாவிடமிருந்து ஈழத் தமிழர்களை அந்நியப்படுத்திவிட்டது. அவர்களின் நியாயமான அரசியல் உரிமைப் போராட்டத்தை அழிக்க துணைபோயுள்ளது.

இந்நிலை மாறவேண்டும் எனில் இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மாறவேண்டும். அதற்கான முயற்சியில் தமிழக முதல்வர் பாடுபடவேண்டும் என்று நாம் தமிழர் கட்சி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறது என்றுள்ளது. (ஏ)

## ஸ்ரான்லிக் கல்லூரியில் நவோதயா வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 2011 ஆம் ஆண்டிற்கான நவோதயா வார நிகழ்வுகள் நாளை முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை வெகு விமர்சையாகக் கொண்டாடப்படவுள்ளது. ஆரம்ப நிகழ்வுகள் நவோதயா கருப்பொருளைத் தெளிவுபடுத்துவதாகவும் தொடர்ந்து பெற்றோர், மாணவர், பழைய மாணவர்கள் இணைந்த சிரமதான நடவடிக்கைகளும் சுற்றாடல் மேம்பாடு, சுகாதாரமும் போசணையும், கணித விஞ்ஞான தொழில்நுட்பக் கண்காட்சிகளும் இடம்பெற்று இறுதிநாள் நிகழ்வுகள் கலை இலக்கியப் பெரு விழாவாகவும் அமைய இருக்கின்றது. (ஏ)

## இந்திய மீனவர்கள் 23 பேரும் விடுதலை

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த 20 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 23 பேரும் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தால் தலைமன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.சி.எம்.ஜெமிஸுக்கு இவர்களின் விடுதலை தொடர்பாக பரிந்துரை செய்யப்பட்டதோடு இவர்களின் விடுதலை தொடர்பான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று மாலை 4.30 மணியளவில் விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி கே.ஜீவராணி, இவர்களை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்தார்.

தலைமன்னார் பொலிஸார் இன்று வியாழக்கிழமை மேற்படி விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கவுள்ள நிலையில் அவர்கள் தமிழகம் அழைத்துச்செல்லப்படவுள்ளனர். (ஏ)

## மாநகரசபை பொதுக்கூட்டம்

யாழ்.மாநகர சபையின் ஆறாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு, மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும்.

கூட்டத்தில் மாநகரசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு மாநகரசபைச் செயலாளர் ரு.சத்தியானந்தன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மக்கள் வங்கியின் பொன் விழாவை முன்னிட்டு 50 குடும்பங்களுக்கு வீடு அன்பளிப்பு

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு பொன்விழாக் கொண்டாட்டத்தையொட்டி வறுமைக்கோட்டின் கீழுள்ள வீடுகளற்ற 50 குடும்பங்களுக்கு வீடமைத்து கொடுக்கப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படவுள்ள நிகழ்வுகள் தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் வங்கியின் 50 ஆவது பொன் விழா கொண்டாட்டங்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக இந்த 50 வீடுகள் அமைக்கும் திட்டம் அமைகின்றது.

இவை எதிர்காலத்தில் மக்கள் வங்கியின் கிராமம் என்ற பெயரில் அழைக்கப்படும். இந்த வீடுகள் அனைத்தும் ஒரே பகுதியிலேயே அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீடும் தலா 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த வீடுகள் அமைக்கும் நிதி மக்கள் வங்கியின் ஊழியர்களால் வழங்கப்பட்டதாகும்.

மன்னார் மாவட்டத்திலுள்ள மடுப் பகுதியில் தற்போது இந்த வீடுகள் அமைக்கும் பணி இடம்பெற்று வருகிறது.

நாடளாவிய ரீதியில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இங்கு குடியேற்றப்படவுள்ளனர். இந்த வீடுகளுக்கான உட்கட்டுமான வசதிகளாக நீர் விநியோகம், மின்சாரம் போன்ற வசதிகளுக்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர இத் தினத்தை ஒட்டி 5 ரூபாய் பெறுமதியான முத்திரையையும், 1000 ரூபாய் பெறுமதியான நாணயக் குற்றியும் வெளியிட மக்கள் வங்கி தீர்மானித்துள்ளது என அவர் கூறினார். (எ-6)

## அடையாள அட்டைக்கு தொப்பியணிந்த படம்

### பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையாம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைக்காக முஸ்லிம்கள் தொப்பி அணிந்த புகைப்படங்களுடனான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக காத்திருப்பதாக ஆட்பதிவுத் திணைக்களம் நேற்று தெரிவித்தது.

தொப்பி அணிந்தவாறான புகைப்படம் கொண்ட தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை இத் திணைக்களம் அண்மைக்காலம் வரை ஏற்றிருந்தது. எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக தொப்பியுடனான விண்ணப்பங்களை ஏற்க வேண்டாம் என பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்தை அடுத்தே தொப்பியுடனான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜகத் பி.விஜயவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனக்கு அனுப்பிய கடிதத்தை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி, பதிலுக்காக காத்திருப்பதாக விஜயவீர குறிப்பிட்டார்.

தொப்பி அணிந்தவாறான புகைப்படங்களைக் கொண்ட தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமையை அடுத்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் இக் கடிதத்தை எழுதியமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## அங்குரார்ப்பணம்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை யாழ். மாவட்டத்தின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலாளர்களின் எதிர்கால தொழில் மேம்பாட்டிற்கான செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக சிறிய, நடுத்தரக் கைத்தொழிலாளர்களுக்கான சங்கங்களை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைக்கவுள்ளது.

இதற்கமைய நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மேற்படி சங்கம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் தலைமையில் அமைக்கப்படவுள்ளது. எனவே, மேற்படி செயலகப் பிரிவுக்குட்பட்ட அனைத்து சிறிய, நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் திவி நகும திட்டத்தில் கைத்தொழில் துறையில் தெரிவான பயனாளிகளும் பங்கேற்று அங்கத்துவராகி பயனடையுமாறு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்டக் காரியாலயம் கேட்டுக்கொள்கிறது.

இந் நிகழ்வில் மத்திய வங்கியின் வட பிராந்தியமுகாமையாளர் கலந்துகொண்டு சிறுதொழில் முயற்சிக்காக தாம் வழங்கும் விசேட சேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளார். (ஸ்ரீ-2)

## மண்டைதீவில் இரதோற்சவம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்கு முகப்பு வயல் முருகன் ஆலய இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும். இருபது வருடங்களின் பின் இவ் ஆலயத்தில் மகோற்சவம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ந)


### லொறி விற்பனைக்கு உண்டு

தரமான முறையில் வேலை செய்யப்பட்ட LEYLAND லொறி லீசிங் வசதியும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
ராஜன் 0750478500 (5445)

### மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது

கடந்த வாரம் நாவலர் வீதியில் மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் T.P யில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
0779027803
(5444)

### தவறிவிட்டது

பரமசாமி மகேஸ்வரி மட்டுவில் வடக்கு சாவகச்சேரி எனும் முகவரி உடைய தேசிய அடையாள அட்டை (425354914 V) 15.06.2011 அன்று பருத்தித்துறை நகரில் சிறிய பேர்ஸ் உடன் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 0212221347 அல்லது 0776105132 இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (5439)

### காணி விற்பனைக்குண்டு

உரும்பிராயில் ஒஸ்கா வீதிக்கும் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கும் இடையில் பலாலி வீதிக்கு சமீபமாக 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

T.P:- 0777031293 (5442)

### பணியாளர் தேவை

உரும்பிராயில் இயங்கும் பெண்பிள்ளைகளின் இல்லத்திற்கு சமையல் பணி, உதவிகள் செய்ய பெண் பணியாளர்கள் தேவை. அத்துடன் தோட்ட பராமரிப்பு வேலைகளுக்கு ஆண் பணியாளரும் தேவை.

தொடர்புகளுக்கு : 021 2230891, 0774584191
என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(இ) தலைவர்

# இன்று ஒரு தகவல்

## சரத்சந்திரர்

புகழ்பெற்ற வங்க நாவலாசிரியர் சரத்சந்திரர்.

அவரிடம் நண்பர் ஒருவர் வந்தார்.

நண்பர், " நீங்கள் எழுத்துத்துறைக்கு எப்படி வந்தீர்கள்?" என்று சரத்சந்திரிடம் வினவினார்.

இது வழக்கமாக எல்லா எழுத்தாளர்களிடமும் கேட்கப்படும் ஒரு கேள்விதான்.

" அதை தெரிந்து கொண்டு என்ன பயன் ?" என்று கேட்டார் சரத்சந்திரர்.

" சும்மா சொல்லுங்களேன் ... தெரிந்து கொள்கிறேன்!" என்றார் வந்தவர்.

" சரி சொல்கிறேன்...!" என்று கூறி சரத்சந்திரர் சொல்ல ஆரம்பித்தார்.

" நான் ரங்கூனில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். சம்பளம் போதவில்லை 'வேலையும் பார்த்துக்கொண்டு ஒரு பலசரக்கு கடையும் வைக்கலாம்' என்று நினைத்தேன். 'இவரால் மளிகைக்கடை வைத்து சரியாக நடத்த முடியுமா ?' என்ற சந்தேகம் என் மனைவிக்கு வந்தது. அதைத் சோதித்து பார்க்க வேண்டும் என்பதற்காக அவர்கள் சில பொருட்களின் அளவு... அவற்றின் விலை... இப்படி சிலவற்றை என்னிடம் சொல்லி எல்லாவற்றையும் மனக்கணக்காகக் கூட்டி போட சொன்னார்கள்... என்னால் சரியாகக் கூட்டிச் சொல்ல முடியவில்லை...அதனால் அவர்கள், 'உங்களால் மளிகைக்கடை நடத்த முடியாது!' என்று சொல்லி விட்டார்கள்... " என்ன செய்வது...வேறு வழியில்லை ...கதை எழுத ஆரம்பித்து விட்டேன்" என்றார்.

கேட்டவருக்கு சிரிப்பு வந்துவிட்டது.

சரத்சந்திரர் ஒரு பக்கம் மிகவும் சீரியஸான நாவல்கள் , சிறுகதைகள், எழுதியிருந்தாலும் அவருடைய இன்னொரு பக்கம் நகைச்சுவை நிரம்பியது.

சரத்சந்திரர் நண்பர்களிடம் பேசும் போதும் சரி... அவர்களுக்கு கடிதங்கள் எழுதும் போதும் சரி..கேலியும் கிண்டலும் நகைச்சுவை உணர்வும் அதிகமாக இருக்கும்.

காந்திஜி ஒரு சமயம் கல்கத்தாவுக்கு வந்திருந்தார். அவரிடம் தேச பக்தர்கள் பலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு சரத்சந்திரரும் இருந்தார்.

கிரண்சங்கர்ராய் என்பவரும் அங்கே இருந்தார். அவர், "காந்திஜியுடன் பழகிய முதல் வங்காளி நான்தான் . போயர் யுத்த சமயத்தில் இவர் லண்டனுக்கு வந்திருந்த போது என்னிடம் தான் வங்காள மொழி கற்றுக் கொண்டார்" என்று கூறினார்.

உடனே சரத்சந்திரர் காந்திஜியைப் பார்த்து, " இவர் உங்களுக்கு வங்காளி மொழியை கற்று கொடுத்தது உண்மை தானா?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்றார் காந்திஜி.

'அதனால் தான் உங்களால் வங்காளி மொழியைக் கற்றுக்கொள்ள முடியவில்லை !' என்றார் சந்திரர்.

அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள்.

சரத்சந்திரர் 'சாம்தாபேர்' என்ற ஒரு கிராமத்தில் தங்கியிருந்தார். அவர் அங்கிருந்து ஓர் இலக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு கல்கத்தாவிற்கு செல்ல வேண்டியிருந்தது. அதற்காக புறப்பட்டார்.

அந்த சமயத்தில் பின்னால் இருந்து யாரோ ஒருவர் அவரைக் கூப்பிட்டார்.

இப்படி கூப்பிட்டவரை பார்த்து யாரோ இன்னொருவர் " போகிறவரை ஏன் கூப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டு அதட்டினார்.

" ஏன் கூப்பிட்டால் என்ன ?" என்று சரத்சந்திரர் கேட்டார்.

அதற்கு இன்னொருவர், " புறப்படுகிறவர்களை பின்னால் இருந்து கூப்பிடுவது அபசகுணம்.. அதனால் போகிற இடத்தில் எதாவது ஆபத்து வரலாம்!" என்று விளக்கம் கூறினார்.

உடனே சரத்சந்திரர் " இதோ ... இவர்கள் என்னை இலக்கிய கூட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறார்களே.. இதை விட வேறு என்ன ஆபத்து வந்துவிடப் போகி றது!" என்று கேட்டிருக்கிறார்.

இப்படி சரத்சந்திரர் இயல்பாகவே நகைச்சுவை உணர்வு கொண்டவர்.

அவருடைய நண்பர் ஒருவர் இவரை தன் வீட்டுக்கு கூப்பிட்டிருந்தார். அங்கே ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சரத் சந்திரருக்கு இயல்பாகவே கச்சேரியில் நீண்ட ஆலாபனை எல்லாம் கேட்பதற்கு பொறுமை இருக்காது .அதனால் அவர் மெதுவாக ..."பாடப் போகிறவர் எப்படி?" என்று கேட்டிருக்கின்றார்.

"அவருக்கு மிகவும் நன்றாக பாடத்தெரியும்?" என்று சொல்லிருக்கிறார்கள்.

அதற்கு சரத்சந்திரர் " அவருக்கு பாடத்தெரியும் என்பது சரி...பாட்டை நிறுத்தத்தெரியுமா?அதை முதலில் சொல்லுங்கள்!" என்று கேட்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் நினைவு தினத்தை முன்னிட்ட கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அடிகளார் நினைவு தினத்தை முன்னிட்ட கட்டுரைப் போட்டி பாடசாலை மாணவர் மத்தியில் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் தரம் ஐந்து முதல் தரம் 8 வரை கீழ்ப்பிரிவு எனவும் தரம் 9 முதல் க.பொ.த (சா/த)தரம் வரை மத்தியபிரிவு எனவும் க.பொ.த (உ/த) மட்டும் மேற்பிரிவு எனவும் போட்டிகள் நடத்தப்படும்.

கீழ்பிரிவு மாணவர்கள் "முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்" என்னும் தலைப்பில் 150 சொற்களுக்கு குறையாமலும் மத்திய பிரிவு மாணவர்கள் "வித்தையில் சிறந்த வித்தகர்" என்னும் தலைப்பில் 250 சொற்களுக்கு குறையாமலும் மேற்பிரிவினர் விபுலானந்தர் அடிகளாரின் சமூகப்பணிகள் என்னும் தலைப்பில் 350 சொற்களுக்கு குறையாமலும் எழுதி அனுப்ப வேண்டும்.

கட்டுரைகள் பாடசாலை அதிபரினூடாக இலச்சினை பதிக்கப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

கட்டுரை களை ஏ4 தாளில் தட்டச்சு செய்து இக் கடிதங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கட்டுரையின் தலைப்பினைக் குறிப்பிடல் வேண்டும். இக் கட்டுரை தொடர்பாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறுவோருக்கு முதலாம் பரிசாக 3 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக இரண்டாயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

எனவே மாணவர்கள் தமது கட்டுரைகளை எதிர் வரும் 19 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம் ஏ.சி. எச்.சி கட்டடம் 91/5, சேர் சிற்றம் பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (ஸ்ரீ-4)

# தேசிய மட்டத்தில் அதிகளவான தங்கப்பதக்கங்கள் வென்று சாதனை



(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறையை சேர்ந்த வடிவேலு ஹரிகரன் தேசிய மட்டத்தில் அதிகளவான தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

அவர் கடந்த மூன்று வருடங்களில் தட்டெறிதல் போட்டியில் 9 தங்கப் பதக்கங்களை வென்று புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவனும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுத்துறை வீரருமான இவர் பாடசாலை பிரதேச செயலகம் மற்றும் இளையோர் கழகங்களுக்கு இடையிலான போட்டிகளில் வட மாகாணம் சார்பாக பங்கு பற்றி தேசிய மட்டத்தில் 2009 ஆம் ஆ ண்டு ஒரு தங்கப்பதக்கத்தையும் 2010 ஆம் ஆண்டு 7 தங்கப் பதக்கத்தையும் 2011 ஆம் ஆண்டு ஒரு தங்கப் பதக்கத்தையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

இலங்கை தேசிய மெய்வல் லுநர் வீரராகவும் இவர் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-24)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வெலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 45 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 60 |
| தக்காளி | 35 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 60 |
| கரட் | 70 | 60 | 50 |
| பூசணி | 25 | 30 | 20 |
| புடோல் | 35 | 40 | 20 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 70 |
| பயற்றங்காய் | 70 | 100 | 80 |
| லீக்ஸ் | 50 | 60 | 60 |
| பீற்றூட் | -- | 80 | 80 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 150 | 180 | 200 |
| போஞ்சி | -- | 140 | 40 |
| கத்தரிதம்புள்ள | -- | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 5-8 | 20 | 15 |
| தேசிக்காய் | 80-100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 45 |

# இராசி பலன்

*30.06.2011*
*(ஆனி 15, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*சதுர்த்தசி பிற்பகல் 3.08மணி வரை*
*மிருகசீரிடம் முன்னிரவு 11.37 மணிவரை*
*இராகுகாலம் 1.26-2.56 மணி வரை*
*சுபநேரம் 7.26-8.56 மணிவரை*
*போதாயண அமாவாசை*

**மேடம்** வெற்றிச் செய்திகள் வீடுவந்து சேரும் நாள்,உடன்பிறப்புகள் வழியில் உதவிகள் கிடைக்கும், நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**இடபம்** நிதிநிலை உயர்ந்து நிம்மதி பெருகும் நாள், மாற்றினத்தவர்கள் மகிழ்ச்சியான செய்திகளை கொண்டு வந்து சேர்ப்பர், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**மிதுனம்** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்,காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம்,பெரிய மனிதரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** இட்மாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்து செல்வீர்கள்,நண்பர்கள் சந்திப்பால் திடீர் விரயம் ஏற்படலாம்.

**சிங்கம்** செவி குளிர செய்திகள் வந்து சேரும் நாள்,விலையுயர்ந்த பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்,வருமானம் திருப்தி தரும்.

**கன்னி** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்,கனவு பலிக்கலாம்,நண்பர்கள் ஆர்வத்துடன் உதவி செய்ய முன் வருவர்.

**துலாம்** தடைகள் விலகி தனவரவு பெருகும் நாள்,காரிய வெற்றிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்,பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்,வரவைக்காட்டிலும் செலவு கூடலாம்,பிரயாணத்தில் கூடிய கவனம் தேவை,தேகநலனில் கூடிய அக்கறை எடுக்க வேண்டிய நாள்.

**தனுசு** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்,வாழ்க்கை துணை வழியே வரவு வந்து சேரும் நாள், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும்.

**மகரம்** சுவாரஸ்மான நாள், பழைய பாக்கிகள் வசூலாகலாம், பகைவர்கள் விலகுவர் , தொழில் வளர்ச்சி கூடும்,போசன சுகமுண்டு.

**கும்பம்** சுபசெய்திகள் வந்து சேரும் நாள்,வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொழில் ரீதியான புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்,தாய்வழி உறவினர்களால் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்,வாகன சுகமுண்டு.

வளவன்

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய

# வருடாந்த மஹோற்சவம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு முத்துச் சப்பறமும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு கைலைக் காட்சியும் 9ஆம் திகதி சனிக்கிழமை பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் சிவபூசை கைலைக் காட்சியும் இரவு திருமஞ்சமும் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 11 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் விசேட கருட சர்ப்ப பூஜை, வாயு பட்சனி நாகம் வீதியுலாவும் இரவு பூந்தண்டிகையும் 13 ஆம் திகதி புதன்கிழமை பகல் கைலைக் காட்சியும் இரவு சப்பறத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

மறுநாள் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இரவு திருவூஞ்சல், கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 16 ஆம் திகதி



சனிக்கிழமை தெப்போற்சவத்துடன் (பூங்காவனம்) திருவிழா நிறைவு பெறவுள்ளது. (ஸ்ரீ)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை கரந்தை குளவத்தை அருள்மிகு ஸ்ரீமுருகமூர்த்தி கோவில் அலங்கார உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

தினமும் முற்பகல் 10.30 மணி முதல் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்நபன அபிஷேகமும் மாலை 5.30 மணி முதல் விசேட பூஜை, வசந்த மண்டப்பூசை நடைபெற்று முருகப் பெருமான் திருவீதியுலா வரும் அருங்காட்சியும் நிகழும்.

அத்துடன் தினமும் மாலை உற்சவத்தின் போது அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஸ்ரீ)

## விலங்குவிசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை றிம்மகோள் மாசால் வீதியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கந்தப்ப சேகரம் வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## நயினாதீவு செல்லும் பக்தர்களின் நலன்கருதி போக்குவரத்து சேவை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய கர வருட மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதனையொட்டி அடியார்களின் நலன் கருதி இலங்கை போக்குவரத்துச் சபையினர், புங்குடுதீவு தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் போன்றவை மேலதிக பேருந்து சேவைகளை யாழ்.குறிகாட்டுவான் துறைமுகம் வரை தினமும் நடத்தவுள்ளன.

அத்துடன் நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினால் பாதுகாப்பான படகுச் சேவைகளும் இடையூறின்றி நடைபெறவுள்ளது.

யாத்திரிகர்களின் வசதி கருதி சுகாதார வசதிகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அன்னதான சபையினரின் அன்னதான ஒழுங்குகளும் சிறப்பாக நடைபெற ஆவண செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் சைவ கலாசார மரபுகளுக்கிணங்க ஆடைகள் அணிந்து கொள்வதுடன் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதையும் பாதுகாப்புக் கருதி தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் அடியார்களுக்கு உதவுவதற்கு சாரணர் இயக்கத்தினர், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், மக்கள் நலன்புரிச் சங்கம், ஆலயத் தொண்டர் சபை ஆகியோர் சேவைகளை வழங்கவுள்ளனர்.

அத்துடன் அடியார்களின் தேவை கருதி ஆலய அறங்காவலர் சபையினர்அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## அதிபர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 4 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் மாணவர்களின் கட்டாய வரவு சம்பந்தமாக கலந்துரையாடப்படவுள்ளதால் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

EKSP திட்டத்தின் கீழ் கணனி, பியானோ ஆகிய பொருட்களைப் பெற்றுக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.வலயக் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதி கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ-2)

## யாழ்.செய்திகள்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இப்பாடசாலையின் அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், கௌரவ விருந்தினராக பழைய மாணவர் வி.பகீரதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-4)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யா/கரணவாய் மகா வித்தியாலத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இப்பாடசாலையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கி.கிருஷ்ணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக இப்பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் ஐ.நடராசா, ஓய்வு பெற்ற மனைப்பொருளியல் ஆசிரிய ஆலோசகர் திருமதி யோ.கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினரின் பாரியார் மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## யாழ்.வணிகர் கழகத்தால் அதிநவீன நிறுவை அலகுகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

நிறுத்தல் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அதிநவீன நிறுவை அலகுகள் அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று யாழ்.வணிகர் கழக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் சகல விதமான நிறுவை நிர்ணயம் செய்யும் கருவிகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.யாழ்ப்பாணத்தில் இதுவரை நடை முறைக்கு கொண்டு வரப்படாத நிறுவைக் கருவிகள் இந்த அறிமுக நிகழ்வில் காட்சிப் படுத்தப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட இந்த நிறுவைகருவிகள் இலங்கையில் நீண்டகாலமாக செயற்பட்டு வரும் அனலைரிகல் இன்ஸ்ருமென்ற்ஸ் பிறை



வெட் லிமிட்டெட் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்தக் கருவிகள் மூலம் பொருட்களின் சரியான நிறை, அவற்றின் தரம் என்பவற்றை அறிந்து கொள்ள முடியும். (ஸ்ரீ-6)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனம் திருவருள் மிகு கல்யாண வேலவ சுவாமி. தேவஸ்தான பிரமோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுந்நாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஊரணி சமுத்திரத்தில் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

## யாழ்.மாவட்ட செயலகத்தில் தேர்தல் முறைப்பாட்டு நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தில் தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையம் ஒன்று அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து தேர்தல் முடியும் வரை இயங்கவுள்ளதாக கொழும்பிலிருந்து வந்த தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட தேர்தல் அதிகாரிகளினாலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் காலங்களில் இடம்பெறும் முறைகேடுகளை பதிவு செய்வதற்காகவே இந்த மத்திய நிலையம் உருவாக்கப்படவுள்ளது.

இது உதவித்தேர்தல் ஆணையாளரின் கீழ் இயங்கவுள்ளது. பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதோடு முறைப்பாடுகள் தொடர்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பணிக்கப்படுவார்கள்.

இதன் மூலம் தேர்தல் காலங்களில் இடம்பெறும் வன்முறைகளை தடுக்க முடியும் என அவர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ-6)

## நவோதய வார நிகழ்வுகள்

(புன்னாலைக்கட்டுவன்)

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய நவோதய வார நிகழ்வுகள் நாளை தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் நாள் ஆரம்ப நிகழ்வுகளும் 2 ஆம் நாள், 3 ஆம் நாள் சிரமதானமும் 4 ஆம் நாள் சுற்றாடல் விழிப்புணர்வும் 5 ஆம் நாள் சுகாதார போசாக்கு விழிப்புணர்வும் 6 ஆம் நாள் கணித, விஞ்ஞான தொழில் நுட்பமும் 7 ஆம் நாள் கலை, இலக்கிய மற்றும் இறுதி நாள் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-78)

# ரிசானா நபீக்கின் விடுதலை குறித்து சவுதி அதிகாரியுடன் ஹக்கீம் பேச்சு

சவுதி அரேபியாவில் குழந்தையொன்றை கொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண்ணான ரிசானா நபீக்கின் விடுதலை குறித்து சவுதி அரேபிய நீதியமைச்சின் ஆலோசகருடன் இலங்கை நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்துரையாடியுள்ளார்.

தற்போது கொழும்பில் நடைபெறும் ஆசிய-ஆபிரிக்க சட்ட ஆலோசனை மன்றத்தின் கூட்டத்தின் போது அமைச்சர் ரவூப் ஹக்கீம் இது குறித்து கலந்துரையாடியுள்ளார்.

மனிதாபிமான அடிப்படையிலும் ரிசானாவின் வறிய பின்னணியையும் கருத்திற் கொண்டு அவரை விடுதலை செய்யுமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரியதாக தெரிய வருகிறது.

எனினும் சவுதி நீதியமைச்சரின் ஆலோசகரும் ஆசிய-ஆபிரிக்க சட்ட ஆலோசனை மன்றத்திற்கான சவுதி அரேபிய தூதுக் குழுவின் தலைவருமான மன்சூர் அல் கபாரி மற்றும் சவுதி அரேபிய தூதுவர் பாருக் வஸிர் அலி ஆகியோர் இது தொடர்பாக கூறுகையில்,

ஷரீஆ சட்டமே மிக உயர்ந்தது எனவும் ரிசானாவுக்காக சவுதி அரேபிய மன்னரோ அரசாங்கமோ தலையிட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

அவ்வேளையில் ரிசானாவுக்கு மன்னிப்பளிக்கக் கோருவதற்காக அக்குழந்தையின் குடும்பத்தினருடன் சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரினார். வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகமவும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினார்.

அக்குழந்தையின் குடும்பத்தினருடனான சந்திப்பொன்றுக்கு உதவியளிக்குமாறு சவுதி அரேபிய அரசாங்கத்திற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு கடிதமொன்றை அனுப்புவதென இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிசுடன் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்துரையாடியுள்ளார். (ஸ்ரீ-4)

# இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



## தேர்த் திருவிழா (30.06.2011)

### தேரேறி இத்தரணியில் வந்தெம்மைக் காத்தருள்வாய் இணுவைக் கந்தா!

வளமான இணுவையில் வள்ளி தெய்வானையோடு
வாழ்வு கொண்ட குமரேசா
களமதில் துணிவோடு வடிவேல் கரம் கொண்டு
சூரனைக் கொன்றொழித்த – வேலவா
உளமோடு மனமுருகி உனை துதிப்போர்க்கு
வண்ணமயில் மீது வந்து அருளும் – மால்மருகா
தளராத மனத்தோடு வண்ணத் தேரேறி இத்தரணியில்
வந்தெம்மைக் காத்தருள்வாய் – இணுவைக்கந்தா

சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்
நாயன்மார்கட்டு.

(5114)

24 ஆம் திருவிழா உபயகாரார்

# மிருசுவில் சந்தியில் வைத்து இருவரின் கைப்பைகள் அபகரிப்பு

(மிருசுவில்)

மிருசுவில் சந்தியில் இரு பெண்கள் தமது கைப்பையினை பறிகொடுத்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, பெண்ணொருவர் வங்கியில் 50 ஆயிரம் ரூபாவை கடனாகப் பெற்று வீடு திரும்பிக் கொண்டிருந்ததை அவதானித்த நபர் ஒருவர் இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்து அவருடைய கைப்பையை பறித்தெடுத்து சென்றுள்ளார்.

இதேவேளை வேறொரு பெண்ணின் கைப்பையும் இதே மாதிரியாக பறித்தெடுக்கப்பட்டுள்ளது. இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமாக ஆட்கள் இல்லாத வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றினை எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக மிருசுவில் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள்அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2-85)

# தேர்தல் பிரசாரங்களுக்கு அரச வளங்கள் பயன்படுத்தத் தடை

## தேர்தல் திணைக்கள அதிகாரிகள் குழு தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் சுயேட்சைகளும் தமது பிரசாரக் கூட்டங்களில் அரச வளங்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வந்த தேர்தல் திணைக்களத்தின் உயர் மட்டக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு அவர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது பிரசாரக் கூட்டங்களின் போது அரச வளங்களை பயன்படுத்த முடியாது.

அது தவிர வேட்பாளர்கள் தமது கட்சியை விளம்பரப்படுத்தும் வீதிப் பதாதைகள் எவற்றையும் காட்சிப்படுத்த முடியாது எனவும் கூறப்பட்டது.

மேலும் இவற்றை தமது கட்சி அலுவலகங்களில் காட்சிப்படுத்த அதிகாரம் உண்டு எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு தேர்தல் நடைமுறைகளை மீறி காட்சிப்படுத்தப்படும் அனைத்து பதாதைகளும் பொலிஸாரின் உதவியுடன் அகற்றப் படும்.

இது தொடர்பில் தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்தில் அறிவிக்க முடியும் எனவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

(ஸ்ரீ-6)

# தவறி விழுந்து படுகாயம்

(கரவெட்டி)

ஆழமான குழாய்க்கிணறு தொட்டியினுள் தவறி விழுந்ததில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வதிரிப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை 12 மணியளவில் நடராசா சிவகுமார் (வயது 34) என்ற குடும்பஸ்தர் தனது வீட்டில் 15 அடி ஆழமான குழாய்க்கிணறு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தொட்டிக்குள் தவறி விழுந்ததில் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை மற்றுமொரு சம்பவத்தில் வரணி புதுத்தோட்டத்தைச் சேர்ந்த பாஸ்கரமூர்த்தி நிறோசன் (வயது 14) பாடசாலை செல்வதற்காக கிணற்றடிக்கு குளிக்க சென்ற வேளை தொட்டியில் தவறி விழுந்ததில் கையில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(ஸ்ரீ-2-24)



வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் 17 வயதுபிரிவினரிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் வலய மட்டத்தில் முதலாமிடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் மாகாண மட்டத்தில் நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்ட மு/ஐயங்கன் குளம் அ.த.க.பாடசாலை வீராங்கனைகளையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (படம்:- மல்லாவி செய்தியாளர்)

# நீதிமன்றத்தால் அபராதம்

மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

* * * * * *

கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 4 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

* * * * * *

நடைபாதையில் இடையூறு விளைவிக்கும் வகையில் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதி மன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

* * * * * *

மது போதையில் மோட்டார்வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

# இனவெறியைச் சுமக்கும் தழும்புகள்!

18 வயதுக்குட்பட்டவர்கள் இந்தக் காட்சியைப் பார்க்காதீர்கள்! இந்த எச்சரிக்கையுடன்தான் அந்தக் காட்சி ஓடியது. ஆனால் 18 வயதைக் கடந்தவர்கள் கூட அந்தக் காட்சியைப் பார்க்கும் தைரியமற்றுக் கடந்து போனார்கள். இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான்! என்பதை 49 நிமிடம் 4 நொடிகள் ஓடிய அந்தக் காட்சியின்மூலமாக உலகத்தின் மடியில் போட்டு உடைத்தது சனல் 4 தொலைக்காட்சி.

போர் ஆரம்பித்தது தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை நீண்டு இறுதிக் களத்தில் இரத்தமும் சதையுமாக முடிந்தது வரையிலான இன அழிப்புக்கு அதிமுக்கிய சாட்சி... அந்த ஒளிபரப்பு புலிகளின் கைகளைக் கட்டிக் குப்புறத் தள்ளி பின் தலையில் சுடுவதும் அலறக்கூட அவகாசம் இல்லாமல் பொத்தெனச் சரியும் உடல்களைக் கண்டு கைகொட்டிச் சிரிப்பதும் சிங்களவர்களின் சீரிய குணமாக உலக அரங்கில் ஒளிபரப்பாகியது. செத்துக் கிடக்கும் பெண் போராளிகளின் உறுப்புக்களைக் காட்டி கொக்கரித்துச் சிரிக்கிற சிங்களக் கொடூரம் உலகத்தின் மனச்சாட்சியையே ஒரு கணம் தலை குனிய வைத்தது.

முழுக்கப் பார்க்கிற அளவுக்கு எனக்கு சக்தி இல்லை. இலங்கையில் நடந்தது அப்பட்டமான இனப்படுகொலை என்பதற்கு இதைவிட சாட்சி தேவை இல்லை! என அலறுகிறார் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன்.எங்களின் அதிர்ச்சியை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. இந்தக் காட்சிகளைப் பார்க்கும்போது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியதற்கான ஆதாரங்கள்போல் தெரிகிறது. இவற்றை நிகழ்த்திய இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து அனைத்துச் சாத்தியக்கூறுகளையும் கண்டறிய இங்கிலாந்து அரசு தயாராக இருக்கிறது! எனப் பதற்றத்தோடு சொல்கிறார் இங்கிலாந்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் அலிஸ்ட்டர் பாட்.

இன அழிப்பு போர் மரபு மீறல் பெண்கள் மீதான சித்திரவதை என அத்தனை விதமான அட்டூழியங்களையும் இலங்கை இராணுவத்தினர் அரங்கேற்றி இருக்கிறார்கள். மனிதப் பட்டியலில் சிங்களவர்கள் இனியும் நீடிக்க வேண்டுமா என்பதை உலகம் யோசிக்க வேண்டும் என மனித உலக உரிமை அமைப்புக்கள் கொந்தளிக்கின்றன. ஆனால் எதற்கும் சலனமே காட்டாத இலங்கை அரசு, சனல் 4 ஒளிபரப்பிய காட்சிகள் நம்பும்படியாக இல்லை. புலிகளின் வழக்கமான சித்திரிப்பு வேலைதான் இது எனப் பாதுகாப்பு அமைச்சகம் மூலமாக அறிவித்தது.

கூடவே, அதி முக்கிய விளக்கமாக சனல் 4 இசைப்பிரியா என்பவரை ஊடகவியலாளர் என்று மட்டுமே சொல்கிறது. ஆனால் இசைப்பிரியா புலிகள் அமைப்பில் லெப்டினன்ட் கேணலாக இருந்தவர் என்கிறது இலங்கை அரசு.

இசைப்பிரியாவுக்கு இழைக்கப்பட்ட பாலியல் கொடுமைகளைப் பற்றி வாய் திறக்கும் வல்லமை இலங்கைக்கு இல்லை.



சுரேன் சுரேந்திரகுமார்

இனப் படுகொலையின் ஆவணப் படத்தைத் தயாரித்தவ்ரான இயக்குநர் கெலம் மெக்ரோ, போர் நடந்தபோது தமிழர்கள் வாழும் பகுதியில் எடுக்கப்பட்டவை தனியாகவும், தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தனியாகவும் எங்களுக்குக் கிடைத்தன. நிராயுதபாணியாக இருப்பவர்கள் சுட்டுக் கொல்லப்படும் காட்சிகளும் சித்திரவதை செய்யப்பட்ட நிர்வாணக் காட்சிகளும் இலங்கை இராணுவத்தினராலேயே எடுக்கப்பட்டவை.

அந்தக் காட்சிகள் எந்த வகையான செல்போனில் எடுக்கப்பட்டவை. என்ன திகதியில் எடுக்கப்பட்டவை என்பதைக்கூட எங்களால் உறுதியாகச் சொல்ல முடியும். காயங்களின் தன்மை, துப்பாக்கிச் சூட்டின் தாக்கம் ஆகியவற்றை வல்லுநர்கள் மூலமாக ஆராய்ந்து உண்மை என உறுதிப்படுத்திய பின்னர் தான் வெளியிட்டோம். நாங்கள் ஒளிபரப்பிய காட்சிகளை எங்களாலேயே கண்கொண்டு பார்க்க முடியவில்லை "என்பதுதான் உண்மை! என்கிறார் வருத்தமாக.



அலிஸ்ட்டர் பாட்

கொக்கரித்துச் சிரிப்பதற்கும் கூடிப் பேசி ரசிப்பதற்கும், போர்க்களத்தில் இலங்கை வீரர்களால் செல்போனில் பதிவு செய்யப்பட்ட வீடியோ காட்சிகளே, இனப்படுகொலையின் சாட்சியாக உலகை வலம் வருவதுதான் வேதனையான வேடிக்கை.

இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை வலியுறுத்தி உலகத் தமிழர் பேரவையின் செய்தித் தொடர்பாளர் சுரேன் சுரேந்திரகுமார் சனல் 4 ஒளிபரப்பிய காட்சிகள் உலகத்தின் கவனத்தை இரக்கத்தோடு திருப்பியிருக்கின்றன. தமிழக முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் ஜெயலலிதா இலங்கை அரசின் போர்க் குற்றங்களைக் கண்டித்தும் பொருளாதாரத் தடை விதிக்கக்கோரியும் சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றியிருப்பது உலகளாவிய தமிழர்களுக்கு நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான கொடூரங்கள் குறித்தும் தமிழக முதல்வர் உலக அரங்கில் கேள்வி எழுப்பவேண்டும். சனல் 4 ஒளிபரப்பிய காட்சிகளைக் காட்டிலும் இதயம் கனக்கச் செய்யக்கூடிய போர்க்குற்ற ஆதாரங்கள் எங்களிடம் நிறைய இருக்கின்றன. உடல் முழுக்கச் சிங்கள அரசின் கொடூரங்களைத் தாங்கியபடி தப்பித்து வந்த உயிர்ச்சாட்சியங்கள் பலர் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். இனச்சித்திரவதைக்கு ஆதாரமாகக் காயங்களைச் சுமந்திருக்கும் அந்த உயிர்ச் சாட்சிகளை உலக அரங்கில் நிறுத்த நாங்கள் தயாராகஇருக்கிறோம்.



இம்மானுவேல் அடிகளார்

முதுகைப்பிளந்தது, ஆணியால் எழுதியது, ஸ்ரீ என்கின்ற சிங்கள எழுத்துக்களைச் சிகரெட் நெருப்பால் எழுதியது எனத் தழும்புகளையே சாட்சியங்களாகச் சுமந்து திரிபவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனவெறிக் கொடூ ரங்கள் குறித்து அவர்கள் வாய் திறந்தால் இந்த உலகத்தால் தாங்க முடியுமா எனத் தெரியாது.பிரிட்டனில் உள்ள அனைத்துக் கட்சியினரும் இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களை ஒப்புக் கொள்கிறார்கள். 13 நாடுகளில் விரவியிருக்கும் எங்கள் அமைப்பு, அனைத்துக் கட்சிகளையும் ஒருசேர எங்களுக் கான தீர்வுக்காக வலியுறுத்தி வருகிறது.

சுவாமி ரவிசங்கர்ஜி காட்டிய காணொளிகளைப் பார்த்த பின்னர்தான் ஈழத்தில் நடக்கும் கொடூரங்கள் எனக்குத் தெரிந்தன என முன்பே சொன்னார் ஜெயலலிதா.உயிர்ச்சாட்சியங்களின் குரல்களைப் பதிவுசெய்து அவருக்குக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். தமிழர்களுக்கு என்று இருக்கும் ஓர் அரசு இலங்கை மீதான நடவடிக்கையை வலியுறுத்தினால் அந்த வார்த்தைகளுக்கான வல்லமை இருக்கும்!' என்கிறார் எதிர்பார்ப்புடன்.

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவேல் அடிகளார் ஹிட்லர் காலத்தில் இன அழிப்பு நடந்த போது அதனை உரக்கச் சொல்ல ஊடக வசதியில்லை.

ஆனால் இன்றைக்கும் ஜேர்மனியில் இன அழிப்புச் சம்பந்தமான புகைப்படங்களை ஆராய்ச்சி செய்து ஆவணமாக்கி வருகிறார்கள். இனவெறிக் கொடூரங்கள் உலக அரங்கில் ஒருபோதும் ஊக்குவிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தவே அத்தகைய ஆவணங்கள் தேடப்படுகின்றன.

ஆனால் இன்றைக்கு கண் முன்னரே நடந்திருக்கும் கொடூரத்தை உலகம் மிகுந்த தயக்கத்தோடு ஒப்புக்கொள்ளும் சூழல் உருவாகியிருக்கிறது. காரணம் இலங்கை அரசுக்கு 20க்கு மேற்பட்ட நாடுகள் ஆயுத மற்றும் பண உதவிகளை செய்தன. ஆனால், இலங்கைஅரசின் இனவெறிப் போக்கை உதவி செய்த அந்த நாடுகளால்கூட நியாயப்படுத்த முடியாது.

சனல் 4 ஒளிபரப்பிய காட்சிகளைக் கண்டு சர்வதேசமும் பொங்கி வெடிக்கிறது. இலங்கை அரசின் கொடூரங்கள் அம்பலமாக்கப் படும் இன்றைய சூழலிலும் அங்கே வதை முகாம்களில் பசி பட்டினிக்கு தமிழர்கள் ஆளாக்கப்படுவதுதான் பெரும் துயரம்.

இலங்கையின் போக்கை மறுக்கமுடியாத உலக நாடுகள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்தினால் மட்டுமே அங்கே நடந்த - இன்றைக்கும் நடக்கும் கொடூரங்களுக்குத் தீர்வாக இருக்கும் என்கிறார் ஆதங்கமாக.

லண்டனில் வாழும் சுதா என்கிற நிர்வாகி இன வெறிக்கொடூரங்களாக சனல் 4 காட்டிய காட்சிகளை மனச்சாட்சி கொண்ட யாராலும் மறுக்க முடியாது. மனித உரிமை அமைப்புக்களுடன் பெண் சித்திரவதைகளுக்கு எதிரான அமைப்புக்களும் இந்த விவகாரத்தில் கைகோர்க்க வேண்டும்.

தாய்த் தமிழீழ உறவுகள் கைகொடுத்திருக்கும் இந்தச் சூழலில் உலகளாவிய மீடியாக்களும் உரக்கக் குரல் எழுப்பி உலகின் மனச்சாட்சியை உலுக்க வேண்டும் என்கிறார் ஏக்கத்துடன்.

எகிப்து,லிபியா போன்ற நாடுகளில் நிகழும் புரட்சி, போர் ஆகியவற்றை அதிமுக்கியத்துடன் காட்டிய ஊடகங்கள் சனல் 4 காட்டியகாட்சிகளை மறந்தும் காண்பிக்கவில்லை. தொப்புள்கொடி உறவாகத் துடித்திருக்க வேண்டிய தமிழக சனல்களும் மருந்துக்குக்கூட அந்தத் துயரங்களைக் காட்டவில்லை.

தமிழக சனல்கள் போட்டி போட்டு அந்தக் காட்சிகளை வெளியிட அது ஏதாவது சாமியாரின்படுக்கை அறைப்பதிவா என்ன?

ஜூனியர் விகடன்

## உலகத்தின் மனசாட்சியை ஒருகணம் தலைகுனிய வைத்த இனவெறிக் கொடூரம்

# இணுவில் கந்தசுவாமி கோவில்

# தேர்த் திருவிழா சிறப்புமலர்-2011.06.30

## இணுவில் கந்தசுவாமி கோவில் வரலாற்றுச் சுருக்கம்

இணுவிலில் அணிசெய்யும் ஆலயங்களில் சரித்திரப் பிரசித்தி பெற்று, பெரிய கோவில் என்று சிறப்பிக்கப்படும் ஆலயம் "இணுவில் கந்தசுவாமி" ஆலயமாகும். கிட்டத்தட்ட நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு முருகன் அடியாரான அருணாசலம் அவர்கள் நித்திரையாக இருந்தபோது, முருகப் பெருமான் அவரின் கனவில் தோன்றி தான் காஞ்சியம்பதியிலிருந்து வருவதாகவும் தமக்கென இல்லிடமொன்று அமைத்துத் தருமாறும் கேட்டார். அடியவர் எங்கே அமைத்துத் தருவது என வினவிய போது, உங்கள் வெற்றிலைத் தோட்டத்தினுள் நொச்சித் தடியொன்று நாட்டப்பட்டிருப்பதாகவும் அந்த இடத்திலேயே அமைக்கலாமெனவும் ஆலோசனை கூறினார். கனவின் உண்மையினை அறிய விரும்பிய அடியவர் மறுநாள் காலை தோட்டத்தில் சென்று பார்த்தபோது வியப்படைந்தார். தனது தோட்டத்தில் இருந்த மாட்டுக் குடிலின்அருகே நொச்சித்தடி நடப்பட்டிருந்தது. அங்கு வேலினை வைத்து வணங்கினார். இம் மகிமையை அறிந்த ஊர்மக்களும், அயற் கிராமத்தவர்களும் வணங்கினார்கள்.காலப்போக்கில் அடியார்கள் மிகுந்து வந்தமையால் பூசை வழிபாடுகளை அருணாசலம் தானே முன்னின்று நடத்தினார். அதன் பின்னர் அவர் தம் சந்ததியினரும் பரிபாலித்து வந்தனர்.

தொடர்ந்து செங்கல்லினால் கட்டப்பட்ட கோவில், 1840 ஆம் ஆண்டு வெள்ளைக் கற்களால்கட்டப்பட்டது.படிப்படியாக கோவில் வளர்ச்சியடைந்து வரும் வேளையில் 1910 ஆம் ஆண்டில் உலகப் பிரசித்தி பெற்ற திருமஞ்சமானது இணுவையூர் தத்துவ ஞானியான பெரியசந்நியாசியார் (சுப்பிரமணியசுவாமி) அவர்களின் கண்ணோட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.

இக் கோயிலானது பொதுக் கோயிலாக மாற்றம் பெற்ற பின்னர் மூன்று தள இராஜகோபுரமானது ஐந்து தளமாகவும், லண்டனிலிருந்து வருவிக்கப்பட்ட புதிய காண்டாமணியும் , மணிமண்டபமும் நிறுவப்பட்டுள்ளன. பெருந் திருவிழாவானது ஆனிமாத அமாவாசையினைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 25 திருவிழாக்கள் சிறப்புடன் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாலயத்தின் கீர்த்திக்குச் சான்று பகரும் மற்றுமோர் அம்சம் புண்ணிய தீர்த்தமாகும். வடக்குப் பக்கத்தில் சாந்தியடி வைரவர் சந்நிதியும், அதன் முன்பாகவுள்ள தீர்த்தக் கிணறும் பிரசித்தமானவை. அடியார்களைப் பிடித்த நோய்களைக் குணப்படுத்தி சாந்தி அளிக்கும் தன்மை இத் தீர்த்தத்திற்கு உண்டு. அடியார்களுக்கு ஏற்படும் அல்லல்களைக் களைந்து ஆறுதலளிக்கும் சாந்தியடி வைரவப் பெருமானும், நொச்சியம்பதி முருகப் பெருமானும் இணுவையம்பதி மக்களின் கண்கண்ட தெய்வங்கள் என்பது மனம் கொள்ளத்தக்கன. தேர்த் திருவிழாவன்றும், மஞ்சத் திருவிழாவன்றும் ஆறு முகப்பெருமான் (சண்முகப் பெருமான்) வீதியுலா வருவது கண்கொள்ளாக் காட் சியாகும். இங்கு கோயில்கொண்டுஉறைந்துள்ள முருகப் பெருமானை நொச்சியம்பதியான், காஞ்சியம்பதியான், கல்யாண வேலவர் எனப் பல சிறப்புப் பெயர்கள் கூறி மக்கள் பக்தி வெளிப்பட வழிபடுவார்கள்.

செ.சோதிப்பெருமாள் (ஜே.பி) தலைவர், தர்மகர்த்தா சபை.





இணுவில் கந்தனின் தேர்த்திருவிழாவின் நேரடி ஒளிபரப்பை காலை 8.00-12.00 மணிவரை www.sivantv.com என்ற இணையத்தளத்தின் ஊடாக கண்டுகளிக்கலாம்.

## பரம்பரைக் குருக்களின் ஆசிச்செய்தி



இலங்கைத் தீவில் இந்துமதத்தின் பெருமைகள்சேர் யாழ்ப்பாணத்தில் இணுவையம்பதி எனும் கிராமத்தில் பிரசித்தி பெற்ற, பல ஆண்டு காலம் போற்றப்பட்டு பல ஆயிரம் மக்கள் பார்த்து மெய் சிலிர்க்கின்ற திருமஞ்சம் அமையப் பெற்ற பல அறிஞர்கள், கற்றோர்கள், கலைஞர்கள், சிவாச்சாரியார்கள் கண்ட இணுவில் கந்தசுவாமி கோவிலில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சகிதம் தேரில் வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். முருகப் பெருமானை வணங்க வரும் அனைத்து அடியவர்களுக்கும் திருவருள் கிடைக்க இத் தினத்தில் ஆசியுரை வழங்குகின்றேன்.

அபராஜிதக் குருக்கள்
சிவஸ்ரீ உருத்திரமூர்த்தி, ஆலய பிரதமகுரு.

## முருகன் அஞ்சேலென அருட்பவனி வரும் காட்சி காண வாரீர்

சித்தர்களும் பக்தர்களும் வாழிணுவை மண்ணில்
முத்தி தரும் முருகனாய் அமர்ந்தவனே!
பக்தியுடன் கொண்டாடும் அடியவர் தம்
துன்பங்கள் நீக்கும் முருகா!
சித்திகள் பல செய்யும் சிவனாரின் மகனே!
முருகா வள்ளி தெய்வ யானையுடன்
சித்திரத் தேரேறி வருவாய் உன் சிங்காரப்
பவனியிலே தீங்குகள் தீர்த்திடுவாய்

திருவாழு மிணுவை மஞ்சத்தால் பேர் போன இணுவைக்கு
இன்று பெருவிழா அழகாக
அருளமர்ந்த ஆறுமுகன் தேர்த்திருவிழா அடியவர்க்கு
இது அருள்விழா அன்பர் குறை தீர்க்கும் விழா
வஞ்சினம் பேசுவோரை அஞ்சி ஓட வைக்கும் விழா
தஞ்சமென நின்றோரைக் காக்கும் விழா
நெஞ்சுருகிப் பக்தரெலாம் வடம்பிடிக்க முருகன்
அஞ்சேலென அருட்பவனி வரும் காட்சி காணவாரீர்

பண்டிதை திருமதி கணேசபிள்ளை,
ஆசிரியை, இணுவில்.

சீமெந்து, மஸ்கன்சீற், டியூலெக்ஸ் கோஸ்வே பெயின்ற், கம்பிகள், எஸ்லோன்பைப், அனைத்து கட்டடப் பொருட்களையும் மலிவாக பெற்றிட
VARMA HARDWARE
K.K.S.ROAD, INUVIL

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

CHELVA PLASTIC
டிஜிற்றல் பிறேம், நம்பர் பிளேட், விளம்பரப் பலகை, பிளாஸ்ரிக் கட்டிங், ஆட்டோ, வான், பஸ் ஸ்ரிக்கர் வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
Head Office: கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
காரைக்கால் வீதி, இணுவில், மஞ்சத்தடி. T.P.: 0773982832 , 0217429580

ஸ்ரீ சிவகணகுமரன் அரிசி ஆலை
யாழ்.மண்ணில் முதற்தரமான அரிசி வகையை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாகப் பெற்றிட
மானிப்பாய் வீதி, இணுவில்.

உதயசூரியன் சலவையகம்
உரிமையாளர்: சி.யோகநாதன்
கே.கே.எஸ்.வீதி,இணுவில் கோவில் வாசல்

ஜெயந்தா மில்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்

கர்ப்பிணித் தாய்மார்க்கும் சிறார்களுக்கும் ஏற்ற போசாக்கு நிறைந்த சத்துமா, வளரும் குழந்தைகளுக்கேற்ற தாய்மார்களுக்கும் வயோதிபர்களுக்கும் ஏற்ற சத்துணவு ஜீவாகாரம்
அண்ணா தொழிலகம்
துரை வீதி,இணுவில்.

அனைத்து வகை மின்சார உபகரணங்களை மிகவும் மலிவாகப் பெற்றிட
ஸ்ரீ வாலாம்பிகை அன் சன்ஸ்
T.P :0773164485 கே.கே.எஸ்.வீதி, இணுவில்

சிறீகண்ணன் ஜுவல்லறவுஸ்
கண்கவர் தங்கநகைகளின் தங்கச் சுரங்கம்
T.P :021 4590995
Mobile:- 0779231602, 0602219054
K.K.S.ROAD, INUVIL

தாசன் ஸ்ரூடியோ
சிறந்த புகைப்படச் சேவை
T.P: 0212227724 கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

தரமான நகைகளை குறித்த தவணையில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ள,இன்றே நாடுங்கள்
புதிய கஜீபன் நகைமாடம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

பலசரக்குப் பொருட்களை மலிவாகப் பெற்றிட
கண்ணா களஞ்சியம்
T.P:021 2223621
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு

ஆர்.வி.ஜி R.V.G
மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம். T.P.: 021 2222129
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். T.P.: 021 222 6808

NEWS PAPER AGENT
பாடசாலை உபகரணம் மற்றும் எல்லாப் பத்திரிகையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
K.K.S.ROAD, INUVIL
T.P: 021 -2226718

சுத்தமான சைவ உணவு வகைகளைப் பெற்றிட
இலச்சுமி உணவகம்
உரிமையாளர்: செ.செல்வேந்திரன்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் பற்றிய துல்லியமான தரவுகளை அரசாங்கம் உடனடியாக வெளியிட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் பின்னரான பல பிரச்சினைளுக்கு இன்னமும் அரசாங்கம் தீர்வுகளை வழங்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக நாட்டில் அரசியல் சர்ச்சைகள் எழுந்துள்ளதாக அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சமீர கொஸ்வத்த தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இடம் பெற்ற கைதுகளுக்கு அரசாங்கமே பொறுப்பு சொல்ல வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் கைதிகள் தொடர்பில் அரசாங்கம் முரண்பாடான தரவுகளை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கைதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான தரவுகளை அரசாங்கம் ஏன் வெளியிட தயங்குகின்றது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு சகல கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கைதிகள் தங்களது சொந்த மொழியில் தொடர்பாடி வழக்கு விசாரணைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

(ஸ்ரீ-2)

## யோகாசனமும் தளர்வு பயிற்சி வகுப்பும்

(யாழ்ப்பாணம்)

ஓம் பதஞ்சலி யோககேந்திராவினால் இருபாலாருக்குமான யோகாசனமும் தளர்வுப்பயிற்சி வகுப்பும் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.சைவபரிபாலன சபை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பயிற்சிவகுப்பு வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை இடம் பெறவுள்ளது.

உடல் வளஆரோக்கியத்திற்கான பயிற்சி வகுப்பில் வயது வேறுபாடின்றி இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

அத்துடன் நோயாளர்கள், விசேடதேவை உடையோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

(ஸ்ரீ-2)



இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிகள் கொள்கையை அமுல்படுத்துவதற்காக கனேடிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 5.6 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிலான திட்டம் தொடர்பிலான ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை அரசு சார்பாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் சர்வதேச ஒத்துழைப்புக்கான கனேடிய அமைச்சர் சார்பாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் புருஸ்லெவி ஆகியோர் கைச்சாத்திடுவதைப் படத்தில் காணலாம்.

# பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டத்திற்கு பூரண ஆதரவு

## பொன்சேகா அறிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்திற்கு பூரண ஆதரவளிக்கப் படவேண்டுமென முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனையவர்களை ஏமாற்றியதனைப் போன்றே இந்த அரசாங்கம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் ஏமாற்றியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மேற்கொண்டு வரும் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு தமது முழுமையான ஆதரவு அளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழக்கு விசாரணைகளுக்காக நீதி மன்றத்திற்கு சென்ற போது அவர் இதனை



குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வழக்கு விசாரணையை மேற்கொள் ளும் நீதி வான் ஒருவர் சுகவீன முற்றிருப்பதனால் வழக்கு எதிர்வரும் ஜுலை மாதம் 5 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இந்தியாவில் தஞ்சமடைந்த அகதிகளின் பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்

(கொழும்பு)

இந்தியாவில் தஞ்சமடைந்த அகதிகளின் பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சி பத்திரங்களை வழங்குவதற்கான விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்புக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவிலுள்ள அகதி முகாம்களில் பிறந்த பிள்ளைகளுக்கே பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த நாட்டு அகதி முகாம்களில் பிறந்த பிள்ளைகளுக்கு இதுவரை பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும் யுத்த மோதல்களின் பின்னர் இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்பிய போதிலும் அவர்களின் பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

குடிவரவு -குடியகல்வு திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்தப் பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுகப்பட்டு வருவதாக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக இதுவரை சுமார் ஆறாயிரம் விண்ணப்பங்கள் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருக்கிணைப்பு அமைச்சிற்கு கிடைத்துள்ளன. (ஸ்ரீ-2)

# பதுளையில் இருவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

பதுளை பசறை மடுகஸ்தலாவ பிரதேசத்தில் இடம்பெற்ற கொலை, தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட இருவருக்கு பதுளை மேல்நீதிமன்றில் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

காணிப் பிரச்சினை காரணமாக 1998 ஆம் ஆண்டு குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காணிப் பிரச்சினை தொடர்பில் 1998 இல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்கு வரும் தினத்துக்கு முதல் நாள் வழக்கு தாக்கல் செய்த நபர் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை சம்பவத்துடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இதன்பின் மேற்கொண்ட விசாரணையின் போது காணிப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருவருமே கொலை செய்துள்ளனர் என தெரியவந்தது.

இந்நிலையில் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட மூவருள் ஒருவர் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குற்றவாளியாக இனம் காணப்பட்ட சகோதரர்களுக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (எ)

# சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்கும் முறைமை தொடரும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இணையத்தளமூடாக விசா வழங்கும் புதிய முறைமை முழுமையாக செயற்படும் வரைக்கும் நாட்டுக்கு வருகை தந்தவுடன் விசா வழங்கும் கொள்கை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புதிய முறைமை முழுமையாக செய்றபடும் வரை இரு நடைமுறைகளும் தொடரும் என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இணைத்தளமூடாக விசா வழங்கும் முறைமையில் ஏற்படும் வெற்றியிலேயே வருகை தந்தவுடன் விசா வழங்கும் முறைமையை நீக்குவது தங்கியுள்ளது என்று அபேவர்த்தன கூறியுள்ளார்.

இணையத்தளமூடாக விசா வழங்கும் முறைமையானது விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதிவரை அந்த முறைமை குறித்து பரிசீலிக்கப்படும். தேவையேற்படின் மேலதிக மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தரும்போது 30 நாட்களுக்கு இலங்கை விசா வழங்குகிறது. சுற்றுலாப்பயணியாக வருகை தந்த பின்னர் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்டு தனிப்பட்டவர்கள் சிலர் இந்த முறைமையை துஷ்பிரயோகம் செய்வதாக அதிகாரிகள் கூறுகின்றனர். (ஸ்ரீ-2)

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

03

## பல்வகைகள் ஒன்று சேர்தல் [Assemblage of Multiplicity]

**கோடாலிக்கண்ணப்பர்** (1845-1930)

இவர் ஒரு கிராமிய கலைச் சிற்பியாவார். மட்டக்களப்பு ஆரைப்பற்றை எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். மட்டக்களப்பிற் பண்டு ஆடப்பட்ட கூத்துக்களுக்குரிய அரசர், அரசியர்களுக்கான முடிகள், புஜகீர்த்திகள், ஆபரணங்கள்,உடைகள் அக்கூத்துக்களிற் பாவிக்



### கலாநிதி மௌனகுரு யாழ் பல்கலைக்கழகம்

கப்படும் வில் அம்பு, கதாயுதம், கட்டாரி (குறுங்கத்தி) தேர், குதிரை என்பவற்றை மரத்தைக்குடைந்து உருவாக்குபவர். நுணுக்கமான வேலைப்பாடுகளுடனான முடிகள் செய்வதில் பெயர்பெற்றவர். ஒரு சிறிய கைக்கோடரியை இவர் எப்போதும் வைத்திருப்பாராம். அச்சிறு கோடரியால் கையிலுள்ள மரத்தில் எப்போதும் செதுக்கு வேலை செய்து கொண்டிருப்பாராம். இதனால் அவருக்கு கோடாலி கண்ணப்பர் என்ற பெயர் வழங்கலாயிற்று

மட்டக்களப்பு ஆரைப்பற்றை 3 தெருக்களாக அன்று பிரிக்கப்பட்டிருந்தது. அவை யாவன: ஆரைப்பற்றைத் தெரு நடுத்தெரு, முகத்துவாரத்தெரு. ஆரைப்பற்றைத் தெருவில் மேஸ்திரி நல்லாரும் நடுத்தெருவில் மேஸ்திரி சின்னத்தம்பியும் முகத்துவாரத் தெருவில் மேஸ்தரி வெள்ளையரும் கோடாலி கண்ணப்பரின் வாரிசுகளெனத் திகழ்ந்தனர். கோடாலி கண்ணப்பர் செதுக்கும் செதுக்கு வேலைப்பாடமைந்த முடிகளிலும் அணிகளிலும் தஞ்சாவூர்ப் பட்டை, தஞ்சாவூர் வில்லை என்ற பச்சை மஞ்சள் சிவப்புத் தாள்களை ஒட்டி அதனை அலங்காரமாக்கியவர்கள் இப்பேரன்மார்கள். கணோரா, மணி, வர்ணம் ஆகியவற்றை இணைத்து இவர்கள் உருவாக்கும் முடிகள் நுட்ப வேலைப்பாடுகள் கொண்டவை. முடிகளுக்கு நச்சி மரம் பாவிக்கப்பட்டது. காயக் காயப் பாரம் குறையும் மரம் அது. செதுக்கு வேலைகளுக்கு அம்மரம் இசைந்து கொடுக்கும். இச்செதுக்கு வேலைப்பாடுகளில் நாயக்கர்கால நுட்பங்களைக் காண முடியும். மட்டக்களப்பின் கிராமங்களில் எல்லாம் 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் ஆடப்பட்ட கூத்துக்களில் பாவிக்கப்பட்ட முடி, உடை தேர்கள், வில், கதாயுதம், கட்டாரி முதலான ஆயுதங்கள் மக்களால் பெரிதும் இரசிக்கப்பட்டதுடன் கூத்தின் தரத்தையும் உயர்த்தி இருந்தன.

கோடாலிக் கண்ணப்பர் கேரளா வைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்ற கதையுமுண்டு. இவ்வகையில்,

1.அக்கால மட்டக்களப்புக் கூத்துமரபு
2.கேரள கலைப்பாணி
3.சிற்பத்தைத் தொழிலாகக் கொண்ட குடும்பப்பின்னணி
4.அவரின் அர்ப்பணிப்பும் ஆளுமையும்
5.பாரம்பரிய கோயிற் சிற்பமரபு

என்ற பல் சேர்க்கைகளின் இணைப்புத்தான் கோடாலி கண்ணப்பரின் கூத்து முடிகள் ஆகும்.

வெளியுலகிற்கு அறிமுகமாகாமலேயே ஈழத்தின் கிழக்கே எங்கோ உள்ள ஒரு கிராமத்தில் வாழ்ந்து அக்கால கட்டத்தில் கலைஞர்களினதும் ஊர் மக்களினதும் பெரும் மரியாதைக்கும் மதிப்புக்குமுரிய கலைஞ

### 19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்

னாக இருந்தவரே கோடாலி கண்ணப்பர்.

**ஆனந்தகுமாரசாமி** (1877-1947)

ஆனந்தகுமாரசாமி கலை வரலாற்று ஆசிரியராகவும் கலா விமர்சகராகவும் அறியப்பட்டவர்.உலகப் பிரசித்திபெற்றவர். ஒரு கிராமத்துள் வாழ்ந்து மறைந்தவர் அல்ல. இலங்கை இங்கிலாந்து அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளில் வாழ்ந்த அனுபவ முடையவர்.இவருடைய சிந்தனைகளில் பின்வரும் சேர்க்கைகள் இணைகின்றன.

1.அவரது வாழ்வும் தனிப்பட்ட ஆளுமையும்
2.அவரது இங்கிலாந்து வாழ்வும் ஆங்கில அறிவும்
3.அன்று உருவாகிய காலனித்துவ சிந்தனைகளும் அதற்கு எதிரான சிந்தனைகளும் இந்திய தேசிய இயக்கப்போக்குகளும்.
4.அவருக்குக் கிடைத்த விவேகானந்தரின் சீடரான அன்னை நிவேதிதா மற்றும் தாகூர்,அரவிந்தர்ஆகியோரின் தொடர்புகள்
5.ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட வேத, உபநிடதங்கள், வட மொழி இலக்கியங்கள்
6.முதல் மனைவி புகைப்படக் கலைஞராக அமைந்தமை.
7.இந்திய சிற்ப கட்டிடக் கலைகள் பற்றி ஹென்றிக் ஸிம்மர், பேர்சி பிறவுண், ஸ்ரெல்லா ஆகியோரின் வேலைகள்
8.இலங்கையில் உருவான தேசிய இயக்கப்போக்குகள்



சோ. கிருஷ்ணராஜா

இத்தனை பன்மைச் சேர்க்கைகளும் இணைய இந்திய தேசிய இயக்கம் ஈன்ற இந்திய தேசிய பெருமிதத்தைக் கூறும் கலாவிமர்சகராக ஆனந்தகுமாரசாமி முகிழ்த்தார்.

(தொடரும்)

# எமது சமூகத்தின் சமகால சவால்களும் கல்வியும்

03

### யாழ்/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர், பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை-2011

சிதைக்கப்பட்ட...

யுத்தமும் திறந்த வெளிவாழ்க்கையும் பட்டினிச் சுமையும் மானிட சுபாவத்தினைப் பரீட்சித்துப் பார்த்தது. அதிர்ச்சி, சோகம், பயம், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம், பட்டினி, அகதி வாழ்க்கை முதலானவை சமூகப் பெறுமானங்கள், விழுமியங்கள் என்பவை வலுவிழக்கப்படவும் மீறப்படவும் தூண்டு தலளித்தன.மொத்தத்தில் சமூகத்தின் கூட்டு வாழ்க்கையும் ஒருங்கிணைந்த பாதுகாப்புப்பொறிமுறையும் மிகவும் மோசமாகச் சிதைவுக்குள்ளாகியது.

**வலுவிழந்துள்ள சனநாயக மரபுகளும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பும்**

இக்காலகட்டத்தில் எமது சமூகத்தின் தலைமைத்துவம் போர்க்கால நெறிமுறைகளை மட்டும் கருத்திற் கொண்டு உருமாற்றப்பட்டது. இயல்பான ஜனநாயக மரபுகளும் பொதுக் கருத்துருவாக்கங்களும் மாற்றுக் கருத்துக்களை விவாதிக்கக் கூடிய தளங்களும் மறுக்கப்பட்டன அல்லது அவசியமற்றுப் போயின. இது ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்க்கையையும் தனிமனித அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் உத்தரவாதப்படுத்துவதற்கு வேண்டிய சூழலை இல்லாதொழித்தது.

**பெருகியுள்ள தங்கிவாழ்வோர் தொகை**

நேரடியானதும் மறைமுகமானதுமான யுத்த விளைவுகள் எமது சமூகத்தினதும் குடும்ப அலகுகளினதும் சுமை,பாரத்தைப் பன்மடங்காகப் பெருக்கியுள்ளது.தாய் தந்தையை இழந்தவர்கள், தாரமிழந்தவர்கள், உழைக்கும் வலுவிழந்தவர்கள் நிர்க்கதியான முதியோர், மருத்துவம், உளவியல் சார்ந்த சிறப்புத் தேவைகளுள்ளோர் என இப்பட்டியல் நீண்டு செல்கிறது.இவற்றைவிடப் பாடசாலை செல்லாதோர், பாடசாலையைவிட்டு இடைவிலகியோர், தொழிற்பயிற்சியற்றோர், முன்னை நாட்போராளிகள், இராணுவ சேவையிலிருந்து வெளியேறுவோர் என மற்றுமோர் மனிதவளத்தொகுதியும் பெருகிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் வருடாந்தம் அண்ணளவாக 2.8 மில்லியன் புதிய தொழிலாளர் படை உருவாகி இணைகின்றது. தற்போதைய புள்ளிவிபரங்கள் 65000 பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்காகக் காத்திருப்பதாகக் கூறுகின்றது. பொதுவாகப் பௌதிக வளங்களைப் பயன்படுத்தாது வெறுமனே வைத்திருந்தாலும் அவை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாத காலத்தில் தாமாக வினைபுரியவோ எதிர்விளைவுகளை ஏற்படுத்தவோ முயற்சிக்க மாட்டாதென்பது நாமறிந்ததே.ஆனால் மனிதவளம் அவ்வாறு செயலற்று இருக்கப்போவதில்லை. மனிதவளம் அணுசக்தியைப் போன்றது.நாம் அதனைச் சாதகமான முறையில் வளப்படுத்தி நெறிப்படுத்தாவிட்டால் அது எமது அரசியல், சமூக பண்பாட்டுதளங்களில் மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். இந்நிலையில் தற்போது வடக்குக் கிழக்கில் அதிகரித்துள்ள தங்கி வாழ்வோர் தொகையினைச் சுய சார்புள்ள குடிமக்களாக முழு ஆளுமையுடன் உருவாக்குவதற்கான மிகப்பெரிய பொறுப்பு எம்மவரிடம் சுமத்தப்பட்டுள்ளது.

திருமதி.பிரேமாவதி செல்வின் இறேனியஸ்
மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

**தொழிற்சந்தைப் போட்டி**

கடந்த மூன்று தசாப்த காலத்தில் இலங்கையில் பொருண்மியக் கட்டமைப்பு உலகமயமாதலுக்கு இசைவாகத் தன்னை மாற்றிக்கொண்டது.

உற்பத்திச் சந்தைகள் பல்தேசியக் கம்பெனிகளுக்காகவும் தனியார் துறையினருக்காகவும் திறந்துவிடப்பட்டன.விவசாயமும் மீன்பிடியும் அரசசேவைத்துறையும் முதன்மையினை இழக்க, அறிவையும் தொழிநுட்பத்தையும் மையப்படுத்தியதாக புதிய தொழில்வாய்ப்புகளுக்கான கதவுகள் தனியார் துறையினரால் திறந்து வைக்கப்பட்டன.

(தொடரும்)

# புத்திக்கூர்மையும் செயற்திறனும் மிக்க 5 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

5 ஆம் எண் அனைவராலும் மிகவும்விரும்பப்படும் எண்ணாகும்.அனைத்து எண்களுக்கும் இந்த எண் பொதுவாக உள்ளது. மிக நன்மையும் அதிர்ஷ்டமும் தருவது இந்த எண்ணாகும். புதனின் ஆதிக்கம் வலுத்து இருப்பவர்களுக்குப் அதிக யோகங்களைக் கொடுக்கும். புதனின் எண் இல்லாதவர்களுக்கும் கூட இந்த ஆதிக்கமானது நல்ல பலன்களைத் தரவல்லது.

இதனாலேயே பெரும்பாலான எண் சோதிடர்கள் பெயர் எண் 5 ஆக வரும்படி அமைத்துக் கொடுக்கிறார்கள்.

ஏனைய அதிர்ஷ்டஎண்களான 1,3,6,9 ஆகியவைகள் நல்ல அமைப்புடனும் வலுவுடனும் அன்பர்களுக்கு இருந்தால்தான் நன்மை புரியும். இல்லையெனில் தீயபலன்களைக் கண்டிப்பாக கொடுத்துவிடும்.

உதாரணமாக 3 ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கு 24,33,42,51 ஆகிய 6 எண்ணின் வர்க்கங்கள் எந்த ஒரு பலனையும் கொடுக்காது. அதுமட்டுமன்று அவர்களை நிச்சயம் பல தோல்விகளையும் வேதனைகளையும் ஆழ்த்திவிடும்.

ஆனால்,5மட்டும் யாருக்கும் தீமை புரியாது! சோதிட சாத்திரத்தில் நவக்கிரகங்களில் சந்திரனுக்கு மட்டும் எல்லா இராசி வீடுகளிலும் சமமாகவும் நட்பாகவும் (விருச்சிகம் தவிர) சொல்லப்பட்டுள்ளது!

அதனால்தான் சந்திரனின் ஆதிக்கம் ஜாதகத்தில் பொதுவாக எல்லா இராசிகளுக்கு நன்மையான பலன்களையே கொடுக்கும். கோசார பலன்களும் சந்திரனின் நிலையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆனால், எண்கணிதத்தில் 5 ஆம் எண்ணே அத்தகைய ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. 1,2,3,4,5,6,7,8,9 ஆகிய எண் வரிசையில் 5 ஆம் எண்ணே மற்ற எண்களுக்கும் நடுவில் அமைந்துள்ளது என்பதே இதன் சிறப்புக்கும் நற்பலன்களுக்கும் காரணம். மற்ற எண்காரர்கள் தங்களது துன்பங்களையும் துயரங்களையும் கண்டு கலங்கும் போது இவர்கள் மட்டும் அவைகளைச் சவால்களாக எடுத்துக் கொள்வார்கள். 5 ஆம் எண் காரர்களின் புத்தி அதாவது அறிவு மிகவும் அற்புதமானது.

ஒவ்வொரு நிமிடமும் புதுப்புது யோசனைகள் பிரபஞ்சத்திலிருந்து இவர்களுக்குத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். தேவர்களில் அறிவுக்கும் புத்திக்கும் செயற்றிறனுக்கும் பெயர் பெற்றவர் விஷ்ணு பகவான்தான். அவரின் முழுக் கடாட்சமும் பொருந்திய எண் இது தான்.

ஏனைய எண்காரர்களைக் காப்பதற்காகவே 5 ஆம் எண்ணின் பலம் உதவுகிறது. 9 எண்கள் வரிசையில் எந்த ஒரு கிரகத்தினருக்கும் இல்லாத ஒரு கவர்ச்சி (காந்த சக்தி) இந்த 5 ஆம் எண் நபர்களுக்கு உண்டு. எனவே தான் இந்த எண்ணைக் காந்த எண் அல்லது ஜனவசியம் நிறைந்த எண் என்று கூறுவார்கள்.

காந்தமானது எந்த அளவு இரும்பினையும் எளிதாக இழுத்துவிடும் தன்மை உடையது. அதே போன்றே மக்களைக் கவர்வதில் இவர்களுக்கு நிகர் எவரும் இலர். இவர்களுக்கு அடுத்த நிலையில்தான் 6 ஆம் எண்காரர்கள் உள்ளனர். ஏனெனில் அவர்களுக்கும் ஜனவசியம் இயற்கையாக உண்டு.

இவர்களது பேச்சில் கேலியும் (அடுத்தவர்களை புண்படுத்தாமல்) கிண்டலும் சிரிப்பும் கலந்திருக்கும். எத்தகைய நபர்களைச் சந்தித்தாலும் தங்களது தனித்தன்மையை அவர்களுக்குச் சீக்கிரம் உணர்த்திவிடுவார்கள்.

பல வருடகாலம் நண்பர்களாக நீடித்துத் தொடர்பு கொள்ளும் தன்மையும் கவர்ச்சியும் நட்புப்பலமும் இந்த 5 எண்காரர்களுக்கு உண்டு. மேலும் இவர்களுக்கு காரில், ரயிலில், விமானத்தில், அடுத்த ஊரில், அடுத்த நாட்டில் எதிர்பாராத நண்பர்களும் அவர்களின் மூலம் நட்பு மற்றும் பரஸ்பர உதவியும் எளிதில் இவர்களுக்குக் கிடைத்து விடும். எப்போதும் எடுப்பாகவும் அழகாகவும் ஆடைகளையும் அழகு சாதனங்களையும் அணிந்து கொள்ளும் விருப்பம் கொண்டவர்கள்.

இவர்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட எந்தத் துறையிலும் தங்களது திறமையின் மூலம் விரைந்து உச்சியை அடைந்துவிட வேண்டும் என்று துடிப்பார்கள். சாப்பிடுவதில் வேகமாக இருப்பார்கள். பேச்சிலும் நடையிலும் வேகம் உண்டு. பார்வைக்கு எளிமையாக இருந்தாலும் அரசர்களையும் கவர்ந்து விடுவார்கள்.

பிறர் முறையாகக் கணக்குகள் எழுதி வைத்துக் கொள்ள நினைக்கும் விப்ரங்களையும் கூட இவர்கள் மனதிலேயே நிலையாக வைத்துக் கொள்ளவார்கள். விரும்பிய போது அவைகளை சரியாக எடுத்துக் காட்டியும் சொல்வார்கள். எப்போதும் பெரிய மனிதர்களின் ஆதரவு இவருக்கு உண்டு.

தங்களது சொந்தப் படைப்புக்களை விட அடுத்தவர்களின் கருத்துக்களையும் விடயங்களையும் தொகுத்து அவைகளை ஆராய்ந்து முடிவுக்கு வரும் அறிவுத்துறைகளில் இவர்கள் சிறப்பாக விளங்குவார்கள். ஒரே சமயத்தில் பல காரியங்களில் கவனம் செலுத்தும் அட்டாவதானிகள் இவர்கள்தான். புகழ்பெற்ற உலகக் கவிஞர் ஷேக்ஸ்பியர், மெஸ்மரிசம் கண்டுபிடித்த மெஸ்மர் போன்றவர்களெல்லாம் இந்த எண்ணில் பிறந்தவர்களே.

### இவர்களின் தொழில்கள்

எழுத்தாளர் பணியில் இவர்கள் நன்கு பிரகாசிப்பார்கள். பேனா நண்பர்கள் அதிகம் உடையவர்கள். அரசியல்துறையிலும் அதிர்ஷ்டம் உடையவர்கள். இவர்களது பேச்சிலும் விவாதங்களிலும் அரசியல் கலப்பு அதிகமாக இருக்கும். அறிவியல்துறைப் பணிக்கும் கலைத்துறை, சோதிடம், கணிதம் போன்ற துறைகளும் ஏற்றவை.

நடிகர்கள், நடிகைகள், கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களாக புகழ் பெறுவார்கள். இவர்கள் எந்த வியாபாரமும் செய்யலாம். ஜனவசியம் நிறைந்தவர்கள். இவர்கள் இருக்கும் இடத்திற்கு கூட்டம் அதிகம் வரும். தரகர்களாகவும் கமிஷன் முகவர்களாகவும் மிகவும் புகழ் பெறுவார்கள்.

பிரயாண முகவர்களாகவும் நன்கு சம்பாதிப்பார்கள். இருப்பினும் ஒரு தொழிலை நன்கு செய்து கொண்டிருக்கும் போது இன்னொரு தொழில் செய்தால் இதைவிட நன்றாக இருக்குமே என்று யோசிப்பார்கள். பின்பு இதை நடுவில் விட்டுவிட்டு புதிய தொழிலில் துணிந்து இறங்கி விடுவார்கள். இதைப்போன்று அடிக்கடி செய்யும் தொழில்களை, வியாபாரங்களை மாற்றக்கூடாது. ஆனால், தாங்கள் செய்து கொண்டிருக்கும் தொழில்களில் புதுமையைப் புகுத்தி வெற்றி அடையலாம்.

உலகத்தின் நாடுகளுக்கிடையே அமைதியை ஏற்படுத்தும் தூதுவர்களாக நன்கு விளங்குவார்கள். வான ஆராய்ச்சி, செய்தி பரப்புத் துறைகள் ஆகியவையும் இவர்களுக்கு வெற்றி தரும். பொதுமக்கள் தொடர்பு சம்பந்தமான தொழில்களிலும் நன்கு பிரகாசிப்பார்கள்.

### இவர்களது திருமண வாழ்க்கை

இவர்களுக்கு காதல் மீது மோகம் அதிகம். துணிந்து காதல்களில் ஈடுபடுவார்கள். அதுவும் 5,9 ஆகிய எண்களில் பிறந்தவர்களால் மிகவும் ஈர்க்கப்படுவார்கள். 1,3,6 பிறந்தவர்களையும் மணக்கலாம்.9,18,27,1,10,19,28 ஆகிய தேதிகளுக்கும் கூட்டு எண் 1,9 வரும் திகதிகளும் திருமணத்திற்கு உகந்தவை. மேலும் 6,15,24 திகதிகளும் கூட்டு எண் 6 வரும் திகதிகளும் ஓரளவுக்கு சாதகமானவையே.குழந்தை பாக்கியம் இவர்களுக்கு குறைவு. எனவே, 2,6 ஆகிய எண்களில் பிறந்தோரைத் திருமணம் செய்தால் குழந்தை பாக்கியம் உண்டு.

### இவர்களது நண்பர்கள்

பொதுவாக மற்ற எண்காரர்கள் அனைவரும் இவர்களுக்கு நண்பர்களே! குறிப்பாக 9,1,6 திகதிகளில் பிறந்தவர்கள் இவர்களுடன் மிகவும் அதிகமாகப் பழகுவார்கள். இவர்கள் யாருடனும் கூட்டுத் தொழில் சேர்ந்து செய்யலாம். மற்ற எண்காரர்களை அனுசரித்துச் சென்று வெற்றி பெற்று விடுவார்கள்.

### இவர்களது நோய்கள்

பொதுவாக இவர்கள் அதிகமாகச் சிந்தனைகளில் ஈடுபடுவதால் மன அமைதிக் குறைவு, மன இறுக்கம், மனச்சேர்வு ஆகியவற்றால் பாதிக்கப்படுவார்கள்.நரம்புப் பலவீனமே அதிகமாகப் பாதிக்கும். அடிக்கடி ஏதாவது நரம்புகளில் வலி ஏற்படும். சிறு வயதுகளில் காக்கை வலிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

எனவே, இவர்கள் முன்பு சொன்னபடி நல்ல தூக்கம்,நல்ல உணவு ஆகியவைகளைக் கடைப்பிடித்தால் பல நோய்களைத் தவிர்த்து விடலாம். சிற்றின்ப இச்சைகளை ஓரளவு குறைத்துக் கொண்டால் நரம்பு பலம் கூடும். கடுமையான நிலைகளில் நரம்புகளின் பாதிப்பால் பக்கவாதம் ஒருபுறம் நரம்புகள் சுருக்கிக் கொள்ளும் நிலை ஏற்படும்.

எனவே, இவர்கள் உணவில் அதிகமாகப் பருப்பு வகைகள், தானியங்கள் ஆகியவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**புதன் யந்திரம் மற்றும் புதன் மற்றும் 24**

| | | |
|---|---|---|
| 9 | 4 | 11 |
| 10 | 8 | 6 |
| 5 | 12 | 7 |

**புதன் மந்திரம் மற்றும் புதன் மற்றும் 24**

ப்ரியங்கு கலிகா ஸ்யாமம்
ரூபேணாப்ரதிமம் புதம்!
ஸௌம்யம் ஸௌம்ய
குணோபேதம் தம்புதம் பிரணமர்மயஹம்.

### சிறப்புப் பலன்கள்

9 எண்களிலும் 5 தான் அனைவராலும் விரும்பப்படுகிறது. காரணம் 5 ஆம் எண்தான் மற்ற 9 எண்களுக்கும் நடுவில் உள்ளது. இந்த எண்ணே மற்ற அனைத்து மக்களையும் (எண்களையும்) ஈர்க்கும் சக்தி மிகுந்த எண்ணாகும். எனவே, இவர்கள் எளிதில் அனைவரிடமும் நட்புக் கொண்டு விடுவார்கள். அனைவரையும் அனுசரித்துச் செல்லும் இயல்பினர். அறிவு என்கிற அற்புதத்தின் விளக்கம் இவர்கள்தான்.

புதியதாக எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வமும் அதை வாழ்வில் உடனடியாக பயன்படுத்திக் கொள்ளும் திறமையும் உண்டு. (தொடரும்)







மு/மாங்குளம் மகா வித்தியாலத்தின் வலைப்பந்தாட்டம், மென்பந்து துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டு வீர, வீராங்கனைகள் 84 பேருக்கு தலா 4000 ரூபா பெறுமதியான சப்பாத்து, விளையாட்டு சீருடைகள் என்பன சமுதாய முன்னேற்ற நிறுவனத்தால் அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவனப் பிரதிநிதிகள், வித்தியாலய அதிபர், பிரதி அதிபர், மாங்குளம் பிரதேச சிவில் இராணுவ அதிகாரி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் வீராங்கனை ஒருவருக்கு வித்தியாலய அதிபர் அன்பளிப்புப் பொதியை வழங்குவதையும் விளையாட்டு உபகரணப் பொருட்களைப் பெற்றுக் கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-மல்லாவிச் செய்தியாளர்)*

# வெளிநாட்டு சக்திகளை தோற்கடிக்க உதவுவேன்!

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான வெளிநாட்டுச் சதிகளை முறியடிப்பதற்கு தன்னாலான பங்களிப்பை வழங்கவுள்ளதாக பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக இராணுவத்தினர் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கையின் பின் நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய ஐக்கியத்தைக் குலைப்பதற்கு ஒருசில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே பிரதியமைச்சர் முரளிதரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டினுள் மீண்டும் பிளவுகளை உருவாக்குவதற்கான வெளிநாட்டுச் சக்திகளின் சதி முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும். அதற்காக எந்தத் தருணத்திலும் என் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றேன்.

இருபது வருடங்களுக்கு முன்பே விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்த பிரிட்டனில் இயங்கும் சனல் 4 தொலைக்காட்சியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவது ஆச்சரியமாக இருக்கின்றது.

சிவிலியன்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் பல மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளார்கள். அவை குறித்து ஒரு வார்த்தை தானும் சனல் 4 காணொளியில் குறிப்பிடப்படவில்லை.

அவ்வாறு விடுதலைப்புலிகள் சிவிலியன்களுக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்த விவரணச் சித்திரங்கள் பலவற்றைத் தயாரித்து வெளியிடும் ஆற்றல் இலங்கைக்கு உண்டு. அத்துடன் வணக்கத்தலங்கள் மற்றும் மத குருமாரைக் கொலை செய்த சம்பவங்கள் குறித்தும் அதில் உள்ளடக்க முடியும்.

ஆனாலும்பயங்கரவாதத்தை முறியடித்து அனைத்து மக்களும் நல்லிணக்கத்துடன் வாழக்கூடிய சூழல் ஒன்று உருவாகிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அதனைக் கெடுக்கும் விதமான செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# சனல் 4 ஊடகத்துக்கு தண்டனை வழங்குமாறு கோரி முறைப்பாடு

ஊடக நெறிமுறைகளை முழுமையாக மீறி புலிகளின் கொடூரமான செயற்பாடுகளை மூடி மறைத்தமை தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி சேவைக்கு தண்டனை வழங்குமாறு கோரி லண்டனில் உள்ள சிங்களவரான எஸ். டி.சில்வா பிரித்தானிய தொலைக்காட்சி சேவைகள் தொடர்பான பெறுப்பு கூறும் நிறுவனமான ஒப்கோம் நிறுவனத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சி விடுதலைப்புலிகளிடம் நிதி உதவியை பெற்றே இலங்கைக்கு எதிராக திரைப்படத்தை தயாரித்துள்ளதாகவும் இலங்கை இராணுவத்தினரால் காப்பாற்றப்பட்ட தமிழர்கள் குறித்து சனல் 4 செவ்விகளை ஒளிப்பரப்பவில்லை எனவும் அந்த முறைப்பாட்டில் சில்வா கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.06 30

★ 1737-ரஷ்யாவின் படைகள் மார்ஷல் மியூனிச் தலைமையில் துருக்கிப் படைகளைத் தாக்கி 4 ஆயிரம் துருக்கியர்களைச் சிறைப்பிடித்தனர்.

★ 1882-அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்ட்டை சுட்டுக்கொன்ற சார்ள்ஸ் கைட்டோ தூக்கிலிடப்பட்டான்.

★ 1905-விசேட தொடர்பியல் தத்துவத்தை அறிமுகப்படுத்தும் ஐன்ஸ்டீனின் இயங்கும் பொருட்களின் மின்னியக்கவியல் ஆய்வுக் கட்டுரை வெளிவந்தது.

★ 1910- இலங்கையில் 5 சத செப்பு நாணயம் பாவனையில் இருந்து விலக்கப்பட்டது.

★ 1912- கனடாவில் ரெஜினா என்ற இடத்தில் சூறாவளி தாக்கியதில் 28 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியினர் உக்ரைனின் லுவோவ் நகரைக் கைப்பற்றினர்.

★ 1956-அமெரிக்காவின் இரண்டு விமானங்கள் அரிசோனாவில் மோதிக் கொண்டதில் 128 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1960-கொங்கோ பெல்ஜியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1971-சோவியத்தின் சோயுஸ் 11 விண்கலத்தில் ஏற்பட்ட காற்றுக் கசிவினால் விண்வெளி வீரர்கள் மூவர் கொல்லப்பட்டனர்.

★ 1972-ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச நேரத்தில் ஒரு லீப் விநாடி அதிகரிக்கப்பட்டது.

★ 1985-பெய்ரூட்டில் 17 நாட்களாகக் கடத்தப்பட்டிருந்த 39 அமெரிக்க விமானப் பயணிகள் விடுவிக்கப்பட்டனர்.

★ 1990-கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிகள் தமது பொருளாதாரத்தை ஒருங்கிணைத்தன.

★ 1997-முதலாவது ஹரி பொட்டர் நூல் வெளியிடப்பட்டது.

★ 1997-ஹொங்காங் நாட்டின் அதிகாரம் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து சீனாவுக்குக் கைமாறியது.

★ 2002-பிரேசில் தனது ஐந்தாவது உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.

**பிறப்புக்கள்**

★ 1966-மைக் டைசன், குத்துச் சண்டை வீரர்

★ 1969-சனத் ஜெயசூரிய, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

**இறப்புக்கள்**

★ 1917-தாதாபாய் நவுரோஜி, இந்திய அரசியல்வாதி (பி.1825)

★ 1971-விக்டர் பட்சாயெவ், சோயூஸ் 11 விண்வெளி வீரர்(பி.1933)

★ 1971-கியோர்கி டப்ரொவோல்ஸ்கி, சோயூஸ் 11 விண்வெளி வீரர் (பி.1928)

★ 1971-விளாடிஸ்லாவ் வோல்கொவ், சோயூஸ் 11 விண்வெளி வீரர் (பி.1935)

**சிறப்புநாள்**

★ கொங்கோ சுதந்திரதினம் (1960)

# இலங்கையர்கள் நாடு குறித்து சிந்திக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது



## பிரதமர் தெரிவிப்பு

இலங்கைக்கு எதிராக சர்வதேச சூழச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் உள்நாட்டில் மக்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்துவதை நிறுத்திவிட்டு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது பொறுப்பு மிக்க எதிர்க்கட்சியின் கடமை என பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரி மாநாயக்க தேரர்களை கடந்த 27 ஆம் திகதி சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர்கள் நாடு குறித்து சிந்தித்து செயற்பட வேண்டிய காலம் எழுந்துள்ளது. 30 வருடகாலம் நாட்டில் பாரிய அழிவுகளை ஏற்படுத்திய பயங்கரவாதிகள் பற்றி பேசாத சர்வதேசத்தில் உள்ள சில பிரிவினர் நாட்டின் நற்பெயரை கெடுக்க முயற்சிக்கின்றனர். இதற்கு இடமளிக்கக் கூடாது.

நாடு என்ற வகையில் ஒரே நோக்கத்துடன் செயற்பட்டால் மாத்திரமே இந்த சூழ்ச்சிகளை தோற்கடிக்க முடியும் எனவும் டி.எம்.ஜயரத்ன மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்

## ஆன்மீகம் 30

"துன்பம் வந்ததும் கடவுளிடம் ஓடும் முட்டாள் மனிதர்கள் இப் போதைக்குத் தங்கள் பிரச்சினையை மறந்து இருக்கலாமே தவிர அவர்களுக்கு எப்படித் தீர்வு கிடைக்கும்?"

குரு தன் சீடனுடன் பயணம் செய்தார். வழியில் ஆழம் மிகுந்த காட்டாறு ஒன்று குறிக்கிட்டது. "இன்று இங்கு தங்குவோம் காட் டாற்றை எப்படிக் கடக்கலாம் என்று யோசித்துச் சொல். நாளை காலையில் சொல்வோம்" என்றார் குரு.

சீடன் மண்ணில் ஏதோ வரைந்து திட்டம் போடுவதும் கண்களை மூடி யோசனை செய்வதுமாகவே இருந்தான்.

மறுநாள் குருவின் முன் மண்டியிட்டான். "குருவே இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்துகூட யோசித்துப் பார்த்தேன். படகு இல்லாமல் ஆற்றைக் கடக்க எனக்கு ஒருவழியும் புலப்படவில்லை." என்றான்.

குரு புன்னகைத்தார். "தண்ணீரில் உன் முகத்தைப்பார்க்க வேண்டுமானால் அது சலனமற்று இருக்க வேண் டும். நீரில் கல்லை எறிந்து கொண்டே இருந்தால் அதில் பிம்பம் எப்படித்தெரி யும்? மனமும் அப்படித் தான்! சிந்தனைகளால் அதைக் கிளறிக் கொண்டே இருந்தால், முழுத்திறனுடன் வேலை செய்யாது. அரை காத தூரத்தில் இந்த ஆறு ஒரு மேட்டில் ஏறுகிறது. அங்கே ஆழமும் இல்லை; வேகமும் இல்லை. உன் மனம் சலனமுற்று இருந்ததால் அதை நீ கவனிக்கத் தவறி விட்டாய்!" என்றார் குரு.

பிரச்சினையிலேயே உழன்று கொண்டு இராமல் சிலசமயம் அதை மறந்திருப்பது கூட தீர்வைத் துரிதப்படுத்தலாம்.

"பிரச்சினைகளை மறந்திருக்க, கோயில்களைவிட சிறந்த இடங்கள் உள்ளனவா?"

கோயிலுக்குப் போகாதவர்கள் எங்கே போவார்கள்? பிரச்சினையை மறக்க மதுவிடம் மண்டியிடுவார்கள். அதன் மூலம் தங்களையே ஒரு பிரச்சினை ஆக்கிக்கொள்வார்கள். அல்லது நண்பர்களின் கைகளில் தஞ்சம் புகுவார்கள். அந்த நண்பர்களுக்கும் அதேஅளவு திறன் இருந்தால் அவர்களால் பாவம் ஆறுதல் மட்டுமே கொடுக்கமுடியும். தீர்வு கிடைக்காது. அடுத்து எங்கே போவது?

ஒரு நிலம் வாங்குறீர்கள். அதன் உரிமை பற்றி ஓர் எதிர்ப்பு வருகிறது. முதலில் உங்கள் பகுதி எம்.எல். ஏ. இடம் போவீர்கள். அவர் கைவிட்டால், அமைச்சரிடம் ஓடுவீர்கள். அவராலும் தீர்க்க முடியாத பிரச்சினை என்றால், அதைவிட மேலான நிலையில் உள்ள யாருடைய உதவியாவது கிடைக்குமா என்று தேடுவீர்கள். அவரும் கையை விரித்துவிட்டால் எங்கே போவீர்கள்?

இதையெல்லாம் தாண்டி, வேறு விதமான உதவி வழங்கவல்ல நண்பன் ஒருவன் இருக்கிறான் என்று மேலே பார்ப்பீர்கள். இது எப்படித் தவறாகும்?

## கோயில்- கொலுமண்டபம் அல்ல!

கோல்ஃப் விளையாட்டில் முந்தைய பல சாதனைகளை முறியடித்து, தன்னிகரற்ற இடத்தில் இருக்கும் டைகர் உட்ஸ் பற்றி கேள்விப்பட்டு இருப்பீர்கள் மற்ற விளையாட்டுக்களிலிருந்து கோல்ஃப் வித்தியாசமானது. கிரிக்கெட்போலவோ, கால்ப்பந்து போலவோ இங்கு எதிரணியினர் கிடையாது. பந்து, அதைச் செலுத்தும் கோல், மைதானம், டைகர் உட்ஸ் அவ்வளவுதான்! இந்த நுட்பமான விளையாட்டில் சிறக்க, உடலும், மனமும் முழுமையானஈடுபாட்டுடன்இணைந்துஇயங்கவேண்டும்.

சற்றே மோசமாக வியையாடிவிட்டால், டைகர்உட்ஸ் உடனடியாக கண்ணைமூடி, தனக்குள்ஏதோ முணுமுணுப்பார். அவருடைய அடத்த வீச்சுக் குறையற்றதாக இருக்கும்.

அது பற்றி அவரிடம் விசாரித்தார்கள்...

"ஒரு புத்த சரணாலயத்தில் எனக்குக் கற்பிக்கப்பட்ட மந்திரம் அது. அதை உச்சரிக்கும்போது செய்த தவறுபற்றிய எரிச்சல், சந்தித்த தோல்வி பற்றிய சிந்தனை இரண்டிலிருந்தும் முற்றிலுமாக விடுபடுகிறேன். மனம் மறுபடி முழுமையான ஈடுபாட்டுடன் இயங்குகிறது" என்றார்.

உண்மைதான். எந்தக்குழப்பம் வந்தாலும் அதனுடன் பிணைத்துக்கொள்ளமல் தள்ளி நின்று இயங்கும்போதுதான். புத்தி தெளிவாக இருக்கும். சிடுக்குகளில் சிக்கிக் கொள்ளாத போதுதான். மனம் கூடுதலான திறனுடன் வேலைசெய்யும். கடவுளிடம் உங்கள் பிரச்சினையை ஒப்படைத்து விட்டதாக நம்பிக்கை வந்ததும், உங்களுக்கு ஒரு சுதந்திரம் கிடைக்கும். பிரச்சினையிலிருந்து உங்கள் கவனம் விலகும். உரிய தீர்வு கிடைப்பதற்கான வாய்ப்பக் கூடுதலாகும்.

"பிரச்சினையிலிருந்து திசை திருப்புவதற்காகத்தான் கோயில்கள் உருவாகினவா"

பிரச்சினைகள் வந்தால்தான் கோயிலுக்குப் போகவேண்டும் என்ற எண்ணமே தவறு!

உங்களுக்குள் அதி அற்புதமான சக்தி நிறைந்திருக்கிறது. அது பற்றிய கவனம் இன்றியே இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

சில நூற்றாண்டுகளுக்கு முன், நம் முடைய முழுத்திறனைத் தூண்டி வெளிக்கொணரும் சடங்குகள் பல நம்தேசத்தில் இருந்தன. பிற்பாடு அவை திரிந்து பிரார்த்தனைகள், வேண்டுதல்கள் என வழிபாடுகளாகப் பெருகிவிட்டன.

கோயில் என்ற அமைப்பு கடவுளிடம் கோரிக்கைகள் வைப்பதற்கான கொலு மண்டபம் அல்ல . பிரார்த்தனை செய்து கடவுளை மகிழ்வித்து காரியம் சாதித்துக் கொள்ள முடியாது.

கோயில் என்பது ஒரு சக்திமையம். அங்கு சக்தியை நிலைநிறுத்த அமைக்கப்பட்ட வடிவமே கடவுள்!

ஒரு தடை வரும்போது முதலில் அதை உங்கள் உடல் வலிமையால் ஒதுக்கப் பார்க்கிறீர்கள். முடியாதபோது, அதை எதிர் கொள்ளச் சிந்திக்கவும் செய்கிறீர்கள். உடலும் மனமும் சேர்ந்து இயங்கும் போது திறன் கூடுகிறது. இவற்றுடன் உணர்ச்சியையும் சேர்த்ததும் உங்கள் புத்திசாலிதனம் வேறுவித பரிமாணத்துக்குப் போகிறது.கூடவே உங்களுடைய உள்ளார்ந்த சக்தியையும் இவற்றுடன்இணைத்துப் பலப்படுத்தினால் அற்புதமான விளைவுகள் கிட்டும்.

அந்த சக்தியை உங்களுக்கு ஊட்டுவதற்காகவே கோயில்கள் என்ற சக்தி மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன .

ஞானிகள் தங்கள் சக்திகளை மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு முதலீடாகக் கோயில்களை நிறுவினர். துரதிர்ஷ்டவசமாக பிற்பாடு வந்த தலைமுறைகள் அந்தச் சக்தியைக் கிரகித்துக் கொள்ளும் திறனை இழந்துவிட்டார்கள் .

இருந்த போதிலும், கபடமற்ற நூறு சதவிகித ஈடுபாட்டுடன் கோயில்களுக்குச் சென்றால் அது வேலைசெய்யும்.

சக்தி வாய்ந்த கோயில்கள் அமுதக் கலசங்கள் அள்ளிப் பருகுங்கள்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தரமான இலக்கியங்களை எவ்வாறு அடையாளம் காண்பது?

## 01

"வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்" என்றார் மகாத்மாகாந்தி.

காந்தி சொல்லிய பல நல்ல அறிவுரைகளை, குறிப்பாக அகிம்சையை கவனிக்கத்தவறியது போன்றே இந்த வாசிப்புத் தொடர்பான அவரது சிந்தனையிலும் எம்மவர்கள் கருத்தூண்றவில்லை.

மரக்கறிக்கடை, இறைச்சி,மீன் கடைகள், நகை, புடவைக்கடைகள், உணவு விடுதிகள், பலசரக்குக் கடைகள், பியூற்றிபாலர்கள், சலூன்கள் இவற்றையெல்லாம் வாரமோ, மாதமோ தவறாமல் போய் வந்து விடுவோம்.

எமது தேவைகளையும் எப்படியோ- கையிலே பணம் இல்லாது போனாலும் கிரடிற்கார்ட், விசா கார்ட் முதலான கடன் அட்டைகளின் தயவினால் பூர்த்திசெய்து கொள்வோம்.

ஆனால், எத்தனை பேர் புத்தகக் கடைகளுக்கு ஒழுங்காகப் போய் வருகிறோம்? எத்தனைபேர் நாள் தோறும் பத்திரிகை படிக்கிறோம். மாதந்தவறாமல் இலக்கிய இதழ்களைப் படிக்கிறோம்.

கோயிலுக்குப்போகின்றோம், பிறந்தநாள், திருமண வைபவம் உட்பட பல குடும்ப ஒன்று கூடல்களுக்கெல்லாம் தவறாமல் போய் வந்து விடுவோம். ஆனால், நூலகங்களின் பக்கம் தலை வைத்துத் தூங்கவும் தயங்குகிறோம்.

ஏன் இப்படி எனக்கேட்டால் கௌரமான ஒரு பதில் எப்பொழுதும் "நேரம் இல்லை."

உணவில் ருசிபேதம் இருப்பது போன்று கருத்திலும் பேதம் இருக்கும் என நம்புகிறேன். உணவு சமைக்கப்பட்டால் அதனை படையல் என அழைப்பது போன்று இலக்கியம் சிருஷ்டிக்கப்பட்டால் அதனைப் படைப்பு என்கின்றோம்.

பிரபல தமிழ் இலக்கிய விமர்சகர் க. நா. சுப்பிரமணியன் (க.நா.சு) ஒரு சந்தர்ப்பத்தில் இப்படிக் கூறியிருக்கிறார்.

"இலக்கியத்தில் தேர்ச்சியுள்ளவர்கள் பழசைத்தாண்டி புதுசு பக்கம்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

வருவதற்கு மறுத்திருக்கிறார்கள். புதுசை மட்டும் அறிந்தவர்கள் பழசின் பக்கம் போக மறுத்திருக்கிறார்கள்." அவர் மேலும் சொல்கிறார்:-"இது எனக்குப்பிடிக்கிறது என்று சொல்கிற போது 'எனக்கு' என்பதில்தான் சாதாரணமாக அழுத்தம் விழுகிறது. இந்த 'எனக்கு' என்பவனின் பயிற்சி, தேர்ச்சி, இலக்கிய இரசனை எல்லாவற்றையும்கொண்டு அவனுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ளலாம், ஒதுக்கலாம். ஆனால், ஏற்றுக் கொண்டாலும் ஒதுக்கினாலும் ஒரு மனிதனின் அபிப்பிராயம் என்கிற அளவில் அதற்கு ஒரு மதிப்பு இருக்கும்."

2002ஆம் ஆண்டு நாம் சிட்னியில் இரண்டாவது எழுத்தாளர் விழாவை நடத்தியபொழுது, ஒரு இளைஞர் சொன்ன கருத்து எனக்கு மிகவும் பிடித்துக் கொண்டது.

அவர்சொன்னார்:- "வாசகர் மாத்திரம் தனது கருத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லாதீர்கள். எழுத்தாளர்களும் தமது படைப்பின் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும்."

இந்த எழுத்தாளர்களிடம் ஒருவகையான பலவீனம் இருக்கிறது.

அதாவது தமது எழுத்துக்கள் தொடர்பாக வாசகர்களிடம் உயர்ந்த அபிப்பிராயம் இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பது. சக எழுத்தாளர்களின் படைப்புக்களைப் படிக்கமாட்டார்கள். ஆனால், தமது எழுத்தைப் படித்தீர்களா? என்று கேட்கவும் தவறமாட்டார்கள்.

இரண்டு பேர் சந்தித்துக் கொண்டால் பலதும் பத்தும் பேசுவார்கள். அரசியல் முதல் ஊர்வம்பு வரையில் அலசப்படும். ஆனால், "இறுதியாக என்ன படித்தீர்கள்?" என்ற கேள்வியை பரஸ்பரம் கேட்பவர்கள் எம்மத்தியில் அபூர்வம்.

சுந்தரராமசாமி வாழும்காலத்தில் கனடாவில் வசிக்கும் அ. முத்துலிங்கத்திடம் அடிக்கடி மின்னஞ்சலில் தொடர்புகொண்டு "சமீபத்தில் என்ன புத்தகம் படித்தீர்கள்?" எனக் கேட்பாராம். அதேசமயம் அவர் தமது படைப்புக்கள் தொடர்பாக ஒரு அபிப்பிராயமும் சொல்கிறாரில்லையே என்ற ஆதங்கம் முத்துலிங்கத்துக்கு இருந்ததாம். இன்றைக்கும் கல்கியின் பொன்னியின் செல்வனைப் படித்துக் கொண்டிருப்பவர்கள்... அதாவது திரும்பத் திரும்ப படித்துக்கொண்டிருப்பவர்

**முருகபூபதி-அவுஸ்திரேலியா**

கள் எம்மத்தியில் அனேகர்.

பொன்னியின் செல்வன், பார்த்திபன் கனவு பல பதிப்புக்களைக் கண்டுவிட்ட போதிலும், நிர்வாகம் மாறிய பின்னரும் 'கல்கி' இதழ் மீண்டும் பார்த்திபன் கனவு தொடர் நவீனத்தை மறுபிரசுரம் செய்திருக்கிறது.

*(தொடரும்)*

# ஜனநாயக ரீதியான போராட்டத்துக்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும்

## மாவை எம்.பி. அழைப்பு

(கொழும்பு)

**ஹிரோசிமாவில் அன்று வீசப்பட்ட அணுக்குண்டின் பாதிப்பை விடவும் மிக மோசமான பாதிப்பை தமிழ்மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். அத்துடன் ஜனநாயக ரீதியான போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டிய நிலைமை எதிர்காலத்தில் ஏற்பட்டால் அதற்கு நமது மக்கள் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.**

காரைதீவு விபுலானந்தா கலாலயத்தில் இடம்பெற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

காரைதீவு பிரதேச சபைக்கான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் செல்லையா இராசையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளைக் கண்டும் குறிப்பாக சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படத்தைப் பார்த்து உலகம் இன்று கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது. துன்பத்தை அதிகம் தாங்கும் இனம்தான் இறுதியில் வெற்றி பெற்று வந்ததாக உலக வரலாறுகள் உண்டு என்பதை எளிதில் மறந்து விட முடியாது. முள்ளிவாய்க்கால் போர் முடிவுக்குப் பின்னர் எமது மக்கள் ஹிரோசிமாவில் அன்று வீசப்பட்ட அணுக் குண்டின் பாதிப்பை விடவும் மிக மோசமான பாதிப்பை தமிழ் மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

வடக்குக் கிழக்கில் எமது பலத்தை திட்டமிட்டு பலவீனமாக்கும் வகையில் இராணுவ அடக்குமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்களின் வளங்களைக் கொள்ளையடிப்பதற்காக திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் இங்கு இடம்பெறுகின்றன.

வளம் கொழிக்கும் எமது விவசாய நிலங்கள் கூட இன்று படைத்தரப்பினரால் கைப்பற்றப்பட்டு பெரும்பான்மை இனத்தினருக்கு வழங்கும் நிகழ்வுகளும் அரங்கேறி வருகின்றன.

வடக்கு- கிழக்கு தமிழர்களின் தாயகம் எனும் கோட்பாட்டை தந்தை செல்வா எமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். ஆனால், நாம் எமது மண்ணில் உரித்துடையவர்களல்ல என்ற ரீதியில் சிங்கள மயமாக்கலை அரசாங்கம் மேற்கொள்கின்றது.

வீதிகளின் பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றும் திட்டமிட்ட செயல்கள் நம் மண்ணில் முனைப்புக் கொண்டுள்ள நிலையில் பௌத்த சிலைகளும் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நமது மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் தகர்ப்பதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எங்கு தமிழர்களும் முஸ்லிம்களும் பலமாக இருக்கின்றனரோ அங்கெல்லாம் அவர்களின் பலத்தை தகர்க்கச் செய்து நிரூபிப்பதற்கு அத்தனை நடவடிக்கைகளையும் அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது.



மஹிந்த சிந்தனையின் பெயரால் இத்தனையும் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, நம்மிடம் மிஞ்சியுள்ள பலம் ஜனநாயக பலம் தான். இந்த ஜனநாயக பலத்தை நாம் பயன்படுத்த வேண்டும். அதற்கான சந்தர்ப்பங்கள் நமக்கு அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கின்றன. இதனை பன்மடங்கு உறுதிப்படுத்துவதற்கு நம் மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்றார். (எ)

## யால தேசிய பூங்கா முழுமையாக திறப்பு

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளுக்காக யால தேசிய பூங்காவின் தடைசெய்யப்பட்டுள்ள 5 தொகுதிகளையும் திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இரண்டாவது பெரிய தேசிய பூங்கா யால என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் யால தேசிய பூங்காவுக்கு விஜயம் மேற்கொண்ட கமநல சேவைகள் மற்றும் வனவிலங்கு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன திறக்கப்படவுள்ள 5 தொகுதிகளுக்குமான ஆரம்பக்கட்டப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## புலிகளுக்குச் சொந்தமான 400 மில்.டொலர் பணம் வெளிநாட்டு வங்கிகளில் உள்ளன

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்கள் சுமார் 400 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தை வங்கிகளில் வைப்புச் செய்துள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

உலகின் முக்கிய 5 நாடுகளின் 8 முன்னணி வங்கிகளில் இந்தப் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கனேடிய பொலிஸார் கனடாவில் இயங்கி வந்த நான்கு வங்கிக் கணக்குகள் பற்றிய தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்களின் அதிகளவு பணம் சுவிட்சர்லாந்து வங்கிகளில் பேணப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. புலி ஆதரவு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த 21 முக்கியஸ்தர்கள் பற்றிய தகவல்களை கனேடிய பொலிஸார் கண்டு பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்புடுகிறது.

அண்மையில் நெதர்லாந்தில் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட விசாரணைகளின் போதும் வங்கிக் கணக்குகள் பற்றிய விபரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக திவயின செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## மருந்துப் பொருள் கொள்வனவு மோசடியை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கையின் போது இந்திய மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நேரடி கொடுக்கல்- வாங்கல்களை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒரே நிறுவனத்தினைச் சேர்ந்த சில இடைத்தரகர்கள் செயற்படுவதால் ஒரே நிறுவனத்திற்கே இந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது..

இதன் காரணமாக மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான நடவடிக்கையின் போது அதிகளவான மோசடிகள் இடம்பெறுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்திய சுகாதார அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## பல்தேசிய நிறுவனங்கள் நோய்களை பரப்புகின்றன

### ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்தேசிய நிறுவனங்கள் வியாபார நோக்கில் நோய்களைப் பரப்பி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

சிறுநீரக நோய், டெங்கு உள்ளிட்ட பல்வேறு நோய்களை பல்தேசிய நிறுவனங்கள் பரப்பி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக இவ்வாறு நோய்க்கிருமிகள் பரப்பப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

நுளம்பு வலைகள், நுளம்புத் திரிகள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் நுளம்பைப் பரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய மாகாணத்தில் பெருமளவிலானோர் சிறுநீரக உபாதைகளினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நோய்க்கு மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் குறித்த சில நிறுவனங்கள் நோயை ஏற்படுத்தும் நச்சுப் பொருட்கள் அடங்கிய உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சில பல்தேசிய நிறுவனங்கள் மனிதனின் வாழ்க்கையுடன் விளையாடுவதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)







வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் நேற்று பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தலைவி திருமதி கீதா விஜயதேவா மங்கல விளக்கேற்றி வைப்பதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள் :- அலுவலக செய்தியாளர்)*




உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கொழும்பிலிருந்து வருகை தந்த தேர்தல் திணைக்கள அதிகாரிகள் உட்பட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழுக்களின் வேட்பாளர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# தமிழ் வாக்காளர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை

## தேர்தல் ஆணையாளருடன் மனோகணேசன் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா, களுத்துறை உள்ளிட்ட தென்னிலங்கை மாவட்டங்களை சார்ந்துள்ள தமிழ் மக்கள் தம்மை வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள இச்சந்திப்பின் போது தலைவர் மனோகணேசனுடன் இக்குழுவில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களுக்கான முன்னணியின் பொறுப்பாளர்களும் இடம்பெறவுள்ளனர்.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 2 ஆம் திகதி.சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இல.72, பாங்சால் வீதி, கொழும்பு-11 இல் அமைந்துள்ள கட்சி தலைமையத்தில் நடைபெறும்.

இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு தற்சமயம் நடைமுறையாகிவரும் வாக்காளர் பதிவு சம்பந்தமாக தாம் எதிர்நோக்கும் அசௌகரியங்களை அறிவிக்கும் படி பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நாடுமுழுவதிலும் மொழிப் பயிற்சி நிலையங்களை உருவாக்க நடவடிக்கை

நாடு முழுவதிலும் மொழிப் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளதாக தேசிய மொழி மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த மொழிப் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன. 25 ஆயிரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு மொழிப் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களுடன் கூடுதலாக தொடர்பாடும் பொலிஸார் மாவட்ட பிரதேச செயலகப் பணியாளர்கள் போன்றோருக்கு முன்னுரிமை அடிப்படையில் மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இலங்கையில் தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு பூரண ஆதரவளிக்கப்படும் என கனடா அறிவித்துள்ளது.

தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான உதவிகளை வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கனடாவும் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளன. இலங்கைக்கான கனேடிய தூதுவர் புருஸ் லெபிக்கும் தேசிய மொழி அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கும் இடையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக கனேடிய அரசாங்கம் 5.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவி யாக வழங்கத் திட்டமிட்டுள்ளது.

கனேடிய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட் டுள்ளது. தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான உதவிகளை கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனம் வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாட்டில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தி வருவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# புதிய வாடகை கார் சேவையினால் 40,000 முச்சக்கரவண்டிகள் செயலிழப்பு

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் தலைநகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாடகைக்கார் திட்டத்தின் மூலம் 40 ஆயிரம் முச்சக்கர வண்டிகள் செயலிழப்பதுடன் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் தொழில்களை இழக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொழும்பில் மாத்திரம் சுமார் 40 ஆயிரம் முச்சக்கரவண்டிகள் சேவையில் ஈடுபடுகின்றன. இன்னும் முழு நேர தொழில்களுக்கும் இந்த முச்சக்கரவண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

அது மட்டுமல்லாது உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வோர் விற்பனையில் ஈடுபடுவோர் என மொத்தத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் இத் திட்டத்தினால் தொழில் இழக்க வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தின் இத் திட்டத்தின் மூலம் தலைநகரில் முச்சக்கரவண்டிகளை இல்லாது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இது ஒரு பாரதூரமான விடயமாகும். எனவே வாடகைக்கார் திட்டத்தை கைவிடுமாறு முச்சக்கரவண்டித் தொழிலாளர்களை சங்கடத்தில் தள்ளிவிட வேண்டாம் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றோம் என்றார். (ஸ்ரீ-4)

# கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் மீதான தாக்குதலைக் கண்டித்து பகிஷ்கரிப்பு

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து கிண்ணியா வலயத்திலுள்ள 26 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் மீது தாக்குதல் நடத்திய ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்யுமாறு கோரி இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

இதற்கிடையில் கிண்ணியா வலயப் பாடசாலைகளில் பகிஷ்கரிப்பு நடவடிக்கை இடம்பெறுவதால் பாடசாலைகளுக்கு வந்த மாணவர்கள் அங்கு கற்றல் செயற்பாடுகள் எதுவும் நடைபெறாத நிலையில் மீண்டும் வீடு திரும்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை சந்தேக நபர்கள் இருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சந்தேக நபர்கள் நேற்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசீம் திருகோணமலையில் நடைபெற்ற கல்விச் செயலமர்வில் கலந்து கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை தாக்கப்பட்டார்.

தாக்குதலுக்குள்ளான அவர் தற்போது கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)




## காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம் இன்று 30.06.2011

முருகன் அடியார்களே!

ஸ்ரீமத் தக்ஷண கைலாயம் என வழங்கப்பெறும் இலங்கா தாவீகத்தின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகரின் வடமேல் பாகத்தில் காரைநகர் திக்கரைப் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளி அடியார் குறைநீக்கி அருள்மழை பொழியும் கலியுக வரத ஜெகநாத சுப்பிரமணியப் பெருமானுக்கு கர வருஷம் ஆனி மாதம் 15 ஆம் நாள் இன்று 30.06.2011 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி காலை 8.00 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெற முருகப்பெருமானின் அருட் கடாட்சம் கிட்டியுள்ளது.

**தேர்த்திருவிழா விசேட நிகழ்ச்சிகள்**

***இலங்கை, இந்திய பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் இசை மழை***

★ நாதஸ்வர இசை அருவி கலாபூஷணம் V.K. பஞ்சமூர்த்தி மற்றும் குமரேஷன் குழுவினர்.
★ மறைந்தும் மறையாத தவில் மேதை N.R. சின்னராஜாவின் புதல்வர்களான N.R.S. ரவிச்சந்திரன் மற்றும் N.R.S. சுதாகரன் குழுவினர்.
★ ஈழ நல்லூர் நாதஸ்வர இசைவேந்தன் பாலமுருகன் குழுவினர்.
★ கோண்டாவில் நாதஸ்வர இசைமணி நாகதீபன் குழுவினர்.
★ அளவையூர் நாதஸ்வர கலாநிதி S.S. சிதம்பரநாதன் குழுவினர்.
★ *தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள கலைஞர்கள் நாதஸ்வர வித்துவான் கே.பாலகிருஷ்ணன் குழுவினர் மற்றும் தனித்தவில் B. நர்மதன்*

ஆகியோரின் நாதஸ்வர தவில் இசை மழையுடன் எம்பெருமான் தேரில் வீற்றிருந்து வீதியுலா வரும்போது அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக திரண்டு வந்து எம்பெருமான் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

விசேட சொற்பொழிவு மாலை 7.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை
செஞ்சொற்செல்வன் ஆறு. திருமுருகன் அவர்கள்
(அதிபர்) ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

திக்கரை,
களபூமி, காரைநகர்.

இங்ஙனம்
க.மு.தம்பிராஜா, க.மு.விக்கினேஸ்வரன் சகோதரர்களும்
எம்பெருமாள் வழிவந்த குடும்பங்களும்
(தேர்த் திருவிழா உபயகாரர்கள்)

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:-
**THAMPI HOLDING (PVT) LTD**
**No:177, Old Moor Street, Colombo-12**

(5441)

# தெரிவுக்குழுக்களை அமைத்து காலத்தை வீணடிக்காமல் அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்



## மங்கள சமரவீர எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசாங்கம் அரசியல் தீர்வுத்திட்டமொன்றை முன் வைக்க வேண்டுமென ஐக்கிய தேசி யக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

தீர்வு தொடர்பாக கவனம் செலுத்தாமல் அதற்கு மாறாக தெரிவுக் குழுக்களை நியமித்து காலத்தை விரயப்படுத்துவதில் அர்த்தமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையுடைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை நாட்டு மக்களுக்கு முன்வைக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச்சட்ட மூலத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பை வெளியிடவில்லை எனவும் 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தைக் காரணம் காட்டி இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை காலம் தாழ்த்துவதனை எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.13 ஆம் திருத்தச் சட்ட மூலம் அல்லது அதற்கு அப்பாலான ஒரு யோசனைத் திட்டத்திற்கும் ஆதரவளிக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூடி மறைக்காது தீர்வுத் திட்டம் வெளிப்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.வெளி விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இந்தியாவிற்கு சென்று ஒரு கருத்தை வெளியிடுவதாகவும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில்முரண்பட்டகருத்துக்களைவெளியிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு அரசாங்கம் முனைப்பு காட்டவில்லை என்பதே தமது கருத்தாகும் என குறிப்பிட்டுள்ள அவர் இவ்வாறு தொடர்ச்சியாக நடந்து கொண்டால் சர்வதேச ரீதியிலான ஈழக் கோரிக்கை வலுப்பெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

தாருஸ்மன் அறிக்கை மற்றும் சனல்4 ஊடக காணொளி போன்ற சர்ச்சைகளை மூடிமறைக்காது அவற்றுக்கு பதிலளிக்க வேண்டும் எனவும் பக்கச் சார்பற்ற முறையில் குறித்த காணொளி தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை. இவ்வாறான குற்றச்சாட்டுக்களினால் நாட்டின் பெயருக்கு களங்கம் ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார். சனல் 4 ஊடகத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என நிரூபித்தால் மில்லியன் கணக்கான பவுன்ஸ்களை நட்டஈடாக பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெறுமனே ஆர்ப்பாட்டங்களின் மூலம், அறிக்கைகளின் மூலம் எதிர்ப்பை வெளியிடுவதனால் இவ்வாறான குற்றச்சாட்டுக்களிலிருநது மீள முடியாது என தெரிவித்துள்ள அவர் ஒழுக்கத்துடன் கடமையாற்றிய காரணத்தினால் ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படைக்கும இலங்கை இராணுவத்தினர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஒன்று, இரண்டு உத்தியோகத்தர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் என்பதனை மறுப்பதற்கில்லை எனவும் அவ்வாறு எவரேனும் குற்றச் செயல்களில் ஈடுபட் டிருந்தால் அவர்களுக்கு தண்டனை வழங்குவதில் பிழையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டத்தை அரசாங்கம் முடக்கியதன் மூலம் அரசாங்கத்தின் ஏதேச்சாதிகாரத் தன்மை நாட்டுக்கு வெளிப்பட்டுள்ளதாக பிரபல சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரப்பகிர்வுக்கு இடமளியோம்

## ஹெல உறுமய அறிவிப்பு

தேசிய பிரச்சினைக்கான தீர்வில் அதிகாரப் பகிர்வு இடம்பெறக் கூடாது. வடக்கு- கிழக்கிற்கு ஏனைய மாகாண சபைகளுக்குள்ள நிர்வாக முறையையும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களையுமே வழங்க வேண்டும்.

மேலதிகமாக பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படுமேயானால் அதற்கு எதிராக கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள அமைதியான சூழலை சீர்குலைக்கும் வகையில் அநாவசியமான தீர்வுத் திட்டங்களை தேசிய அரசியலுக்குள் உட்புகுத்த அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது. இன்று தமிழர்கள் எவ்விதமான பிரச்சினையும் இன்றி இலங்கையில் வாழ்கின்றார்கள் என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிஷாந்த வர்ணசிங்க கூறுகையில், இலங்கையில் 30 ஆண்டு கால யுத்தம் முடிவடைந்து இரண்டு வருட காலமாகின்றது. இன்று வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழர்கள் நாட்டில் எங்கு வேண்டுமென்றாலும் செல்லக் கூடிய அச்சமற்ற சூழல் பிறந்துள்ளது.

எவ்விதமான பிரச்சினைகளும் அசம்பாவிதங்களும் இன்றி மூவின மக்களும் வாழ்கின்றனர். இதுவே யுத்தத்தின் பின்னர் இலங்கை அடைந்த மிகப் பெரிய வெற்றியாகும்.

இதனை சீர்குலைக்கும் வகையில் முடிவுற்ற பிரச்சினைக்கு தீர்வுகாண அதிகாரப்பகிர்வுகளை விஸ்தரிப்பது படுமோசமான செயலாகும். அரசாங்கம் தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசி தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை ஆராய்வதில் எவ்விதமான தவறும் இல்லை. ஆனால், புலிகளின் கோரிக்கைகளையே முன்வைக்கும் கூட்டமைப்பு போன்றவர்களிடம் அதிகாரப்பகிர்வு குறித்து பேசுவது ஆபத்தான விடயமாகும்.

எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரப்பகிர்வு ஒன்றுக்கு ஜாதிக ஹெல உறுமய இடமளிக்காது. நாட்டை மீண்டும் பின்னகர்த்தும் நடவடிக்கையில் ஈடுபடும் சக்திகளுக்கு எதிரான கடுமையான போராட்டங்களை முன்னெடுப்போம். அரசாங்கம் தமிழ் மக்களின் உண்மையான அடிப்படைப் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை முன்வைக்க வேண்டும். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தமிழ் மக்களின் பிரச்சினை கிடையாது என்றார். (ஸ்ரீ-4)


**UNIVERSITY OF JAFFNA**
**FACULTY OF GRADUATE STUDIES**
**Master of Science in Health Management-2011/12**

Applications are called from eligible candidates for the above Master Degree Programme conducted by the Faculty of Graduate Studies, University of Jaffna.

**Admission Requirements:**

a. Graduates (in any subject) from a recognized University.

OR

b. Any other qualifications accepted by the Senate of the University.

**Duration** : One year
**Medium of Instruction** : English
**Selection** : By Test & Interview
Title of the Paper: "**Health Proficiency**" (2 hours)

**Closing date for Application**-1st August, 2011

**Application Procedure :**

Application forms and other details could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna either in person or by post on a payment of Rs.500/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope (Rs 5/=) 23 cm x 10cm in size.

Duly completed applications should be forwarded to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna on or before the closing date of application.

Illegible, incomplete and late applications will be rejected without intimation.

Registrar,
University of Jaffna.
28.06.2011. (C-3595)


## கணித விநாடிவினா போட்டி முடிபுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வலய மட்ட கணித விநாடிவினாப் போட்டி முடிபுகள் துணுக்காய் வலயக் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் விபரம் வருமாறு,

**தரம்-06**

ஜெ.கிருஷ்கா(மு/அனிச்சியன் குளம் அ.த.க.பா.), ச.பிரியங்கா(மு/திருமுறிகண்டி இ.வி), இ.அபிலக்சன் (மு/முத்தையன்கட்டுவ.க. அ.த.க.பா)

**தரம்-07**

க.கிரிஜா(மு/மல்லாவி ம.க.), இரண்டாமிடமிருவர் யோ.கானுஜா (மு/அனிச்சியன்குளம்த.வி), செ.டிலக்சன் (மு/திருமுறிகண்டி இ.வி.)

**தரம்-08**

அ.பௌசிகா(மு/முத்தையன்கட்டு இ.க. அ.த.க.பா), இரண்டாமிடமிருவர் சி.ரவி வர்ணன்(மு/முத்தையன் கட்டு இ.க.அ.த.க.பா), வி.தனுஸ்ரா (மு/பாலி நகர் ம.வி.)

**தரம்-09**

ஜெ.தர்மிகன்(மு/அனிச்சியன் குளம் த.வி.), அ.கஜேந்தன்(மு/கற்சிலைமடுஅ.த.க.பா), சு.கஜீபன் (மு/அனிச்சியன்குளம் த.வி.)

**தரம்-10**

ந.பிரகாஸ்(மு/மல்லாவி ம.க.), தெ.நதுசாளினி(மு/மல்லாவி ம.க.), ம.கம்சயா (மு/முத்தையன்கட்டு இ.க.அ.த.க.பா)

**தரம்-11**

ப.தயாழினி(மு/மல்லாவி ம.க.), இரண்டாமிடமிருவர் பா.ஜனந்தனன்(மு/யோகபுரம் ம.வி.), சு.நிலுசா (மு/மல்லாவி ம.க.)

**தரம்-06**

(ஆங்கிலமொழிமூலம்)

சி.ரவிராஜ்(மு/யோகபுரம் ம.வி.), க.அனுஷா(மு/யோகபுரம் ம.வி.), த.கிசோபிதன்(மு/ஒட்டுசுட்டான் ம.வி.) (ஸ்ரீ-15)


**ST. JOHN'S COLLEGE, JAFFNA**
**ANNUAL PRIZE GIVING 2011**

**Saturday 2nd July 2011**
**at 10.00 a.m.**

*Chief Guests:*
**The Rt.Rev.D.R.Canagasabey**
Bishop of Colombo
&
**Harshini Canagasabey**

**Chairman:**
**Ven S P Nesakumar**
Archdeacon of Jaffna & Manager of the college

**Parents, Old Boys & Well- wishers are cordially invited.**

**Principal, Staff & Students**

(C-3588)

# கடாபிக்கு எதிரான பிடியாணை உத்தரவை ஏற்கமாட்டோம்

## லிபியா அறிவிப்பு



(டிரிபோலி)

லிபிய ஜனாதிபதி கடாபிக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை அறிவிப்பை ஏற்கமாட்டோம் என்று அந் நாட்டின் நீதித்துறை அமைச்சர் முகம்மெத் அல் குவாமுதி தெரிவித்துள்ளார்.

லிபியாவில் தனக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுவரும் மக்கள் மீது அந்நாட்டு ஜனாதிபதி கடாபி மனித உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறி சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அண்மையில் பிடியாணை பிறப்பித்தது.கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாம் மற்றும் அந்நாட்டு உளவுத் துறை தலைமை அதிகாரிக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இது குறித்து டிரிபோலியில் அந்நாட்டு நீதித்துறை அமைச்சர் முகம்மெத் அல் குவாமுதி அளித்த பேட்டியில், மூன்றாம் தர நாடுகளின் தலைவர்கள் மீது வழக்கு தொடர்வதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஆயுதமாக மேற்கத்தைய நாடுகள் பயன்படுத்தி வருகின்றன. லிபிய அரசில் கடாபியோ அவரது மகனோ எவ்வித பொறுப்பிலும் இல்லை.

ஆதலால் அவர்கள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுக்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெரிவித்தார்.பெங்காசியில் கடாபிக்கு எதிரான பிடியாணை உத்தரவை கிளர்ச்சியாளர்கள் வரவேற்று கொண்டாடினர்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் 9 ஆண்டு கால வரலாற்றில் 2009 இல் முதன் முதலாக சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷிருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இதுவரை அவர் கைது செய்யப்படவில்லை .தற்போது இரண்டாவதாக கடாபிக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## ஆப்கான் நட்சத்திரவிடுதியில் தற்கொலைத் தாக்குதல்

### 14 பேர் பலி

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள நட்சத்திர விடுதியில் நள்ளிரவில் மனித வெடிகுண்டு தாக்குதல் மற்றும் துப்பாக்கி சூடு நடந்தது. வெளிநாட்டவர் விரும்பி தங்கும் இந்த நட்சத்திர விடுதியில் 6 பயங்கரவாதிகள் திடீரென புகுந்து தாக்குதல் நடத்தினர்.

இந்த ஐந்து பேரும் அங்கு தங்கியிருந்தவர்களை சுட்டதில் வெளிநாட்டவர் உட்பட 14 பேர்களாவது இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இத்தாக்குதலில் பலர் காயம் அடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில்பயங்கரவாதிகள்புதுமையான திட்டங்களை செயற்படுத்தியுள்ளனர். (ஸ்ரீ-4)






ஈரான் நாட்டு இராணுவ வீரர்கள் கண்டம் விட்டு சென்று தாக்கக்கூடிய ஏவுகணை பரிசோதனையை இரகசிய இடத்தில் நடத்தினர்.

# சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தலைவர் தெரிவு



சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தலைவராக பிரான்ஸ் நிதியமைச்சர் கிறிஸ்டைன் லாகார்டே (55) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த அமைப்பின் முதலாவது பெண் தலைவர் என்ற பெருமையை இதன் மூலம் அவர் பெறுகிறார்.

சர்வதேச நாணய நிதிய தலைவராக இருந்த ஸ்டிராஸ் கானின் மீது பாலியல் புகார் கூறப்பட்டதையடுத்து அவர் அந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

அவருக்கு அடுத்தபடியாக அந்தப் பதவிக்குரியவரைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைப்பின் செயற்குழு வோஷிங்டனில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கூடியது.

மெக்ஸிகோ மத்திய வங்கி ஆளுநர் அகஸ்டின் கார்ஸ்டென்ஸ் லாகர்டே ஆகியோருக்கு இடையே கடுமையான போட்டி இருந்தது. எனினும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் லகார்டே தெரிவு செய்யப்பட்டார். (ஸ்ரீ-4)

# ஒபாமாவின் பதவியை ஏலம் விட முயற்சி

## முன்னாள் ஆளுநர் மீது குற்றச்சாட்டு

அமெரிக்காவில் செனட் சபையில் உறுப்பினராக இருந்த ஒபாமா கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்றார். இதை தொடர்ந்து அவரது செனட் உறுப்பினர் பதவி வெற்றிடமாக இருந்தது.

இந்த நிலையில் அப்போது அமெரிக்காவின் இலினாயிஸ் மாகாண ஆளுநராக இருந்த ராட் பிளாகோசெவிச் வயது (54) என்பவர் வெற்றிடமாக இருந்த ஒபாமாவின் செனட் உறுப்பினர் பதவியை ஏலத்தில் விற்க முயன்றார். இவர் ஒபாமாவின் ஆளுங்கட்சியான ஜனநாயக கட்சியை சேர்ந்தவர்.

இதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார். பதவியை ஏலத்தில் விற்க முயன்ற குற்றச்சாட்டு தவிர ஆளுநராக இருந்த போது அவர் செய்த பல்வேறு ஊழல் குறித்தும் புகார் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் முடிந்தது.அப்போது அவர் மீது 23 குற்றச்சாட்டுக்களை நடுவர்கள் அரசு அதிகாரிகள் நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் மீண்டும் 2 ஆவது முறையாக வழக்கு விசாரணை நடைபெற்றது. அதில் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் புகார்களில் 17 குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நடுவர்கள் தெரிவித்தனர். அவர்களின் இந்த அறிவிப்பை கேட்டதும் பிளாகோ செவிச் கடும் அதிர்ச்சி அடைந்தார். (ஸ்ரீ-4)

# யூரோவை கைவிடுகிறது ஜேர்மனி

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனி, யூரோ நாணயத்தாளை கைவிட்டு பழைய நாணயத்தாளான டொச்மார்க்கிற்கு மாற இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒரே மாதிரியாக யூரோ நாணயத்தளைப் பயன்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் ஜேர்மனி நாட்டின் மத்திய வங்கியான பண்டெஸ் வங்கியில் டொச்மார்க் சின்னம் பதித்த ரூபாய் நாணயத்தாள்அச்சிட உத்தரவிட்டுள்ளதாகவும் இதையடுத்து டொச்மார்க் சின்னம் கொண்ட ரூபாய் நோட்டுகள் அச்சிடும் பணி நடந்து வருவதாகவும் அந்நாட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜேர்மன் நாட்டில் இரண்டாம் உலகப் போருக்குப் பின் டொச்மார்க் நாணயத்தாள் பயன்படுத்தப்பட்டு வந்தது. அமெரிக்காவின் டொலருக்குப் பின்னர் உலகளவில் டொச்மார்க் நாணயத்தாளுக்கு நல்ல பெயர் இருந்தது. தற்போது அந்நாட்டு மக்கள் அந் நாணயத்தாளின் தனித்துவத்தை இழக்காமல் மீண்டும் அதே நாணயத்தாள் வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விட்டு வந்தனர். மேலும் வர்த்தக ரீதியில் டொலருக்கு அடுத்ததாக நல்ல முதலீட்டை டொச்மார்க் நாணயத்தாள் ஈர்த்து வந்தது.

யூரோ நாணயத்தாளைப் பெற்றிருக்கும் கிரீஸ் நாடு தற்போது திவாலாகியுள்ளது. இந்நிலையில் யூரோ நாணயத்தாள் மதிப்பை சர்வதேச அளவில் நிலை நிறுத்த வேண்டுமானால் கிரீஸ் நாட்டை திவாலில் இருந்து ஐரோப்பிய நாடுகள் காப்பாற்றியே ஆக வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதனால் யூரோ நாணயத்தின் மதிப்பு எதிர்காலத்தில் கேள்விக்குறியாகியுள்ளதால் ஜேர்மன் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் டொச்மார்க் நாணயத்திற்கு மாற வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

இது தொடர்பாக ஜேர்மன் நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வில் யூரோ நாணயத்திற்கு எதிர்காலம் இல்லை என்று 71 சதவீதம் பேரும் அந்த நாணயத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று 19 சதவீதம் பேரும் கிரீஸ் நாட்டை காப்பாற்றும் ஐரோப்பிய நாடுகளின் அதிரடி நடவடிக்கை வெற்றி அளிக்காது என்று 68 சதவீதம் பேரும் கருத்து தெரி வித்துள்ளனர். மற்றொரு ஆய்வில் யூரோ நாணயத்திலிருந்து கிரீஸ் நாட்டை வெளி யேற்ற வேண்டும் என்று ஜேர்மனி நாட்டு மக்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)



துருக்கியில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்குப்பின் அந்நாட்டு முதல் பாராளுமன்ற கூட்டம் தலைநகர் அங்காராவில் கூடியது. இதில் பிரதமராக ரீசெப்தைப்பி ஈர்டோகன் (வலது) பதவியேற்றுக் கொண்டார்.

எல்லாமனிதர்களையும்நம்பிவிடுவது ஆபத்து.
ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.
–ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நடக்காத திருமணத்திற்கு சீதனம் பேசப்படுகிறது

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியமாகுமா? இவ்வாறு ஒரு மாநாடு கூட்டப்பட்டால், மாநாட்டைக் கூடியவர்களே மகா புத்திசாலிகள் என்று பெயர் எடுப்பர்.

ஏனெனில், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் அரச தரப்பும் தமிழர் தரப்பும் பொருத்தமில்லாத பேச்சுக்களையும், பொருத்தமில்லாத சிந்தனைகளையுமே வெளிப்படுத்தி வருகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவாக இருக்கவேண்டும் என முன்மொழியும் தமிழர் தரப்புக்கள், தம்பாட்டில் தங்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்து கருத்துக் கூறுகின்றனர்.

ஒரு தரப்பு சொல்கிறது பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று.

இன்னொரு தரப்புச் சொல்கின்றது பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலத்திற்கும் அப்பால் சென்று தீர்வு காண வேண்டும் என்று.

மற்றொரு தரப்புக் கூறுகின்றது தமிழர்களின் தேசியம், சுய நிர்ணயம், மரபுவழித் தாயகம் இப்படி.

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது மொழிச் சிறப்புமிக்க கருத்தியலாக இருக்கின்றதே தவிர, யதார்த்தம் உணரப்படுவதாக இல்லை.

இவை யாவும் தமிழர் தரப்பின் கட்சி நிலைமை, சுயநிலைமை, மனநிலைமை என்பன சார்ந்தவை.

மறுபக்கத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் பெரும்பான்மை என்ன கூறுகின்றது என நோக்கினால் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அவசியமே இல்லை என்கிறது ஒரு தரப்பு.

இன்னொரு தரப்பு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது என்கிறது.

மற்றொரு தரப்பு யுத்தம் முடிந்துவிட்டது. எல்லாமே இந்த நாட்டின் பிரஜைகள். எனவே சிங்களவர், தமிழர் என்ற பேதம் இனித் தேவையில்லை. எல்லா இனமும் ஒற்றுமைப்பட்டு விட்டதால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவையில்லை. இப்படி அங்கு கூறப்படுகின்றது.

உண்மையில் இவ் இரு தரப்பும் நடக்காத திருமணத்திற்கு சீதனம் பேசுகின்றன. இவ்வாறு பேசுவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருவது போன்ற மாயையை சர்வதேச சமூகத்தில் ஏற்படுத்துவது. இதனை சிங்களத் தரப்புச் செய்ய,

தமிழர் தரப்போ தங்களின் அரசியல் பிழைப்புக்காக அவையும் சேர்ந்து கதை விடுகின்றன. இதுவே நிதர்சனம்.

உண்மையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணம் இலங்கை அரசிடம் துண்டறக் கிடையாது. இந்த உண்மையைக் கூறுவதை ஆளும் தரப்பு மறைப்புச் செய்தாலும் தமிழர் தரப்பு ஏன்தான் அதை மறைத்து வருகிறதோ தெரியவில்லை.

என்ன செய்வது நடக்காத திருமணத்திற்கு பொருத்தம் பார்க்கும்பொழுது போக்குகளும் தேவை என்ற அடிப்படையில் சனங்கள் இவற்றை சகித்துக் கொள்கின்றன. அவ்வளவுதான்.

# உப்பாறு கடல்நீரேரித் திட்டத்தை உடனடியாக செயற்படுத்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

உப்பாறு கடல் நீரேரித் திட்டத்தை உடனடியாக செயற்படுத்துவதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

மழை நீரைத் தேக்குவதையும் அசாதாரண கடல்மட்ட எழுகை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் கடல் நீர் நிலப் பகுதிக்குள் வருவதைத் தடுப்பதையும் பிரதான நோக்கமாகக் கொண்ட இத்திட்டமானது யாழ்ப்பாணத்தின் பாரிய நீர்ப்பாசனத் திட்டமாகும்.

இத்திட்டத்தின் பிரதான கூறுகளாக 42 வான் கதவுகளைக் கொண்ட 'பராஜ்' உடன் 14 வெள்ளத்தடுப்பணைகள் அடங்குகின்றன. இத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் 41 ஆயிரத்து 500 ஏக்கர் அடி நீரை ஆகக் கூடியபட்சம் சேமித்து வைக்க இயலும். கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக கைவிடப்பட்டிருந்த இத்திட்டத்தை மீளச் செயற்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

மேற்படி 14 வெள்ளத் தடுப்பணைகளில் கப்பூது, வாதரவத்தை வெள்ளத் தடுப்பணை தவிர்ந்த ஏனைய வெள்ளத் தடுப்பணைகள் சீராக்கப்படாமை காரணமாக ஆகக் கூடிய மழை நீரை தேக்க இயலாதுள்ளதுடன் தேக்கப்பட்ட மழை நீரை கடலுக்கு திறந்துவிட வேண்டிய நிலைமையே அண்மைக் காலமாக ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி குறுகிய கால கட்டத்தினுள் மேற்படி வெள்ளத் தடுப்பணைகளை சீராக்குவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 40 கிலோ மீற்றர் நீளமுள்ள இத்திட்டம் உரிய இலக்கை அடையும் நிலையில் கோப்பாய் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட கடல் நீரேரிக்கு அண்மித்த வயல் நிலங்கள் வெள்ள அனர்த்தங்களிலிருந்து காப்பாற்றப்படும். அவற்றின் வினைத்திறன் அதிகரிக்கும் என்பதுடன் இப்பகுதிகளின் தரைக்கீழ் நீர்வளம் திடகாத்திரப்படும்.

நிலத்திலுள்ள உவர்த்தன்மை குறைந்து நன்னீர் வளம் பெருகுவதால் உவர்த் தன்மை காரணமாக கைவிடப்பட்ட பயிர்நிலைகளை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்த இயலும்.

எனவே மேற்படி பல்வேறு பயன்பாடுகளைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் பருவ மழைக்காலத்திற்கு முன்பதாக இத்திட்டம் குறுகிய கால உடனடித் திட்டமாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-2)

# மாங்குளம் புகையிரத நிலைய புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(மல்லாவி)

மாங்குளம் புகையிரத நிலைய புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. மேற்படி புனரமைப்புப் பணிகள் வடபிராந்திய புகையிரத பொறியியலாளர் எஸ்.இராசரத்தினம் தலைமையில் இந்திய அரசாங்கத்தினுடைய நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைபெறவுள்ளன.

இதன் முதற்கட்டமாக மாங்குளத்திலிருந்து ஓமந்தை புகையிரத நிலையம் வரையிலான 30 கிலோ மீற்றர் தூரத்திற்குரிய புகையிரத தண்டவாளங்கள் மாங்குளம் புகையிரத நிலையத்தில் இறக்கப்பட்டுள்ளன.

மேற்படி வேலைக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வேலையில் இணைய விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுடன் மாங்குளம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையிலுள்ள புகையிரத அலுவலகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏ9 வீதியில் மாங்குளம் சந்தியிலுள்ள பிரதான பாலமும் மாங்குளத்திலிருந்து யாழ். நோக்கிச் செல்லும் 4 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பனிக்கன்குளம் பகுதியிலுள்ள பாலமும் சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சீன தொழில்நுட்பவியலாளர்களின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-15)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதியவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

சைக்கிளில் பயணித்த போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றது.

இவ் விபத்துச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இ.இராமச்சந்திரன் (வயது 70) என்ற முதியவரே உயிரிழந்தவராவார். இந்த விபத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் சந்தேக நபர் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து யாழ். நகரப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-6)

# புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக தி.இராசநாயகம், உப தலைவர்களாக ஆ.வடிவேலு, ந.சிவகரன், செயலாளராக வி.ஜி.தங்கவேல், உப செயலாளர்களாக சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜ குருக்கள், து.தசோனியா, பொருளாளராக மா.லீலா விநோதன் மற்றும் காந்தியம் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ.எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதேவேளை சங்கத்தின் யாழ். மாவட்ட கிளை நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

இதில் தலைவராக கா.கார்த்திகேசு, செயலாளராக மு.தபேந்திரன், பொருளாளராக க.பிரமதீஸ்வரி ஆகியோரும் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர்களாக த.விமல்ஷினி, சி.சாதனா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-2)

# சத்திய தரிசனம்



கடவுளின் கரங்களில் உங்களை ஒப்படைத்து விடுங்கள். வெற்றியோ, தோல்வியோ அவன் அளிக்கட்டும். அதனாலென்ன? அவர் உங்களைச் சிரமப்படுத்துவதில் உறுதியாயிருக்கலாம். முடிபில் பார்க்கும் போது அது உங்கள் நன்மைக்காகவே கூட இருக்கலாம். உங்களால் எப்படி அதை அறிந்து கொள்ள முடியும்? நீங்கள் யார் அதை அறிய? சிறப்பாகச் செயல் புரிந்து விட்டுச் சும்மாயிருங்கள்!

நீங்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வாழ புதிய வீடுகள் கட்டிக் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். அங்கே கடவுளைப் பிரதிஷ்டை செய்து வைக்க வேண்டுமென ஆசைப் படுகிறேன்.

நான் சொல்லுவது செங்கல், சுண்ணாம்பு வீடு அல்ல. நல்ல எண்ணங்கள், நல்ல சொற்கள், நல்ல செயல்கள், நல்ல சுற்றம். அங்கே நீங்கள் அமைதியாக வாழ இயலும். அனைவரும் கூட்டாக அந்த வீடு கட்டி கிரகப் பிரவேசத்திற்கு என்னை அழைக்க முடியும். நான் ஆர்வமுடன் இசைவேன். அவ்வீடுகள் என்னுடையவை. நான் வந்து உள்ளே நுழைய அழைப்புக் கூடத் தேவையில்லை. ஆன்மீக ஆனந்தத்துக்கான வீடு அது! என் இருப்பிடம் என்னை விரும்பும் தூய இதயம் தான்.

பக்தி உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும். கடவுளின் கருணையைக் கொண்டு வரும். மேகங்கள் திரண்டு வயல்கள் மீது மழை பொழிய வேண்டும். உயிரூட்டும் நீரைத் தாவரங்கள் மேலெழுந்து பருக முடியாது. பக்தி கடவுளைக் கீழே நம்மிடம் கொண்டு வரும் ஆற்றல் பெற்றது.

பக்தன் தன் உடல், மனம் , வாழ்வு அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விட்டால், அவர் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். ஏனென்றால் அவர் எப்போதும் நம்முடனேயே இருப்பார்.

# இலங்கைக்கு எதிராகப் பேரணி தென்னிந்தியா நடிகர் சங்கம் தீர்மானம்



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை நடிகர்கள் சரத்குமார், சத்யராஜ், மயில்சாமி, ராதாரவி, நடிகைகள் மனோரமா. குயிலி உள்ளிடோர் நேற்று சந்தித்து கலந்துரையாடிய போதே இந்த அனுமதியைக் கோரியதாக கூறப்படுகிறது.

இச்சந்திப்பு குறித்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த நடிகரும் சட்டமன்ற உறுப்பினருமான சரத்குமார், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பொறுப்பேற்றதற்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் இச்சந்திப்பின் போது வாழ்த்துத் தெரிவித்தோம். இலங்கை மீது மத்திய அரசு பொருளாதார தடை விதிக்க வேண்டுமென சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் முதலமைச்சருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்தோம். இலங்கை அரசு மீது மத்திய அரசு உடனே பொருளாதார தடையை விதிக்க வேண்டும். கச்சதீவை மீட்டு தமிழக மீனவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பு அளிக்க வேண்டும். இதை வலியுறுத்தி தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் நடிகர், நடிகைகள் ஆளுநர் மாளிகை நோக்கி ஊர்வலம் செல்லச் திட்டமிட்டுள்ளோம். அதற்கான அனுமதியை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கேட்டுள்ளோம். அவரும் அனுமதி வழங்குவதாகக் கூறியுள்ளார்.

இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும் என வலியுறுத்தி ஆளுநர் மாளிகையை நோக்கி பேரணி ஒன்றை நடத்துவதற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் தென்னிந்திய நடிகர் சங்கம் நேற்று அனுமதி கோரியதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் பாராட்டு விழா நடத்த திட்டமிட்டுள்ளோம். அதற்கான அனுமதியை வழங்குமாறும் அவரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

தற்போது பல்வேறு பணிகள் இருப்பதால் பாராட்டு விழாவை பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார் என சரத்குமார் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# தமிழகத்தின் புதிய ஆளுநர் இரு தினங்களில் பதவியேற்பு

(சென்னை)

தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவின் 5 ஆண்டு பதவிக்காலம் கடந்த 20 ஆம் திகதியுடன் முடிந்தது. தற்போது அவர் தற்காலிகமாக பதவி நீடிப்பில் உள்ளார்.

தமிழ் நாட்டுக்கு புதிய ஆளுநர் நியமனம் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மேலும்சில மாநிலங்களிலும் புதிய ஆளுநர் நியமிக்கப்பட உள்ளனர்.

தமிழக ஆளுநராக முன்னாள் தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் நியமிக்கப்படலாம் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் மார்க்கரெட் ஆல்வா புதிய ஆளுநர் பதவி ஏற்பார் என்று தெரிய வந்துள்ளது.

மார்க்ரெட் ஆல்வா நியமனத்துக்கு தமிழக அரசு சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

(ஶ்ரீ-4)

# மீனவர் மீதான தாக்குதலை கண்டித்து கடல் முற்றுகை

## பொன். ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் சிறை பிடிப்பை கண்டித்து ஜுலை இறுதியில் கடல் முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என பா.ஜ மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவை திரும்ப பெற வேண்டும் என தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியது மட்டும் இப்பிரச்சினையில் பலன் தராது. 1974 இல் இந்திரா பிரதமராக இருந்த போது கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது. சோனியா காங்கிரஸ் தலைவராக இருக்கும் நிலையில் இலங்கையில் அப்பாவி தமிழர் கள் படுகொலை செய்யப்பட்டனர். இலங் கைத் தமிழர் அழிவுக்கு காங்கிரஸ் காரணம். மத்தியில் பா.ஜ தலைமையிலான ஆட்சி அமைந்தால் மட்டுமே இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியும்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்துஇலங்கை



கடற்படையினரால் கொல்லப்படுகின்றனர். சிறைப்பிடிக்கப்படுகின்றனர். மீனவர்களை காப்பாற்ற மத்திய, மாநில அரசுகள் தவறிவிட்டன. மீன்பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு பாதுகாப்பு இல்லை.

இப்பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகளின் மெத்தனப்போக்கை கண்டித்து கடல் முற்றுகை போராட்டம் நடத்தப்படும். ஓகஸ்டில் மாநில மாநாடு நடக்கிறது. இலங்கை தமிழர் பிரச்சினை குறித்தும் மாநாடு நடத்தப்படும் என்று தெரிவித்தார். (ஶ்ரீ-4)

# 2ஜி ஊழல் குறித்து பலரை விசாரிக்க தி.மு.க யோசனை

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஊழல் குறித்து பாராளுமன்ற பொதுக்கணக்கு குழுவின் அறிக்கையை இதன் தலைவர் முரளி மனோகர் ஜோஷி நேற்று முன்தினம் தாக்கல் செய்ய முயன்றார். ஆனால் காங்கிரஸ் கட்சியின் இந்த அறிக்கையை தாக்கல் செய்ய அனுமதிக்கவில்லை. ஆனால் ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள தி.மு.க நேற்று முன்தினம் அறிக்கையை சுற்றுக்குவிட ஆதரவு தெரிவிப்பதோடு மேலும் பலரை விசாரிக்க வேண்டும் என கூறியதால் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

2ஜி அலைக்கற்றை ஊழல் குறித்து பாராளுமன்ற பொதுக்கணக்கு குழு விசாரணை நடத்தி வந்தது. பிரதமர், நிதியமைச்சர், உள்துறை அமைச்சர் ஆகியோரை விமர்சித்து முரளி மனோகர் ஜோஷி அறிக்கை தயார் செய்து இருந்தார். இந்த குழுவின் அறிக்கை விபரம் கடந்த ஏப்ரலில் பத்திரிகைகளில் வெளியானதால் ஏப்ரல் 28 ஆம் திகதி நடந்த பாராளுமன்ற பொதுக்கணக்கு குழுவில் ரகளை ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஒட்டுமொத்தமாக முரளி மனோகர் ஜோஷி தயார் செய்த அறிக்கையை புறக்கணித்தன.

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்ற பொதுக் கணக்கு குழுவின் அறிக்கயை பரிசீலனைக்காக சுற்றுக்கு விடலாம் என கருத்து தெரிவித்தனர். கடந்த கூட்டத்தில் ஜோஷி அறிக்கை தாக்கல் செய்வதை எதிர்த்த தி.மு.க இந்த முறை அறிக்கையை சுற்றுக்கு விட ஒப்புக் கொண்டது.

தி.மு.க உறுப்பினர் ஆதிசங்கர் இதை ஆமோதித்தார். அவர் குரல் எழுப்புகையில், 2ஜி ஊழல் விவகாரம் தொடர்பாக இதில் தொடர்புடைய மேலும் பல சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்றார்.

பகுஜன் சமாஜ் கட்சி உறுப்பினர் சதிஷ் சந்திர மிஸ்ராவும் அறிக்கையை படித்துப் பார்த்து விட்டு அதன் பின் உறுப்பினர்கள் கருத்து சொல்ல வேண்டும் என ஜோஷிக்கு ஆதரவாக செயற்பட்டார்.

2ஜி அலைக்கற்றை ஊழலில் தி.மு.கவைச் சேர்ந்த ராஜா சம்பந்தப்பட்டுள்ளார். இது குறித்த அறிக்கையை காங்கிரஸ் எதிர்த்த போதும் தி.மு.க ஆதரித்துள்ளது. கூட்டணியில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய மரபுசாரா எரிசக்தித்துறை அமைச்சர் பரூக் அப்துல்லா இது குறித்து குறிப்பிடுகையில், பாராளுமன்ற கூட்டு குழு ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து விசாரித்து வரும் நிலையில்பாராளுமன்ற பொதுக்கணக்கு குழுவின் அறிக்கை தேவையில்லாத ஒன்று என்றார்.

ஒவ்வொரு முறையும் அறிக்கை தாக்கல் செய்யப்படும் போது பொதுக் கணக்கு குழு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் அரசியல் மற்றும் சட்டத்துறை நிபுணர்களை கலந்து ஆலோசித்து தன் முடிவை ஜோஷி தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.(ஶ்ரீ-4)

## பாரதச் செய்திகள்

# காளகஸ்தியில் கருணாநிதி, கனிமொழிக்கு இராகு-கேது சர்ப்பதோஷ பூஜை

கடந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க கூட்டணி தோல்வி அடைந்தது. இதே சமயத்தில் ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக கனிமொழி கைது செய்யப்பட்டு தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கருணாநிதி, மு.க.ஸ்டாலின், கனிமொழி ஆகியோருக்கு காளகஸ்தி கோவிலில் இராகு-கேது தோஷ சர்ப்ப நிவாரண பூஜை நடத்த கருணாநிதியின் மகள் செல்வி முடிவு செய்தார். இதற்கமைய, கருணாநிதி குடும்பத்தினர் காளகஸ்தி கோயிலுக்கு சென்றனர்.

அங்கு கருணாநிதி, மு.க.ஸ்டாலின், கனிமொழி ஆகியோர் பெயர்களில் இராகு-கேது சர்ப்ப தோஷ நிவாரண பூஜை நடத்தினர் அதன் பின் மிருத்யுஞ்ஜெய லியங்கம் அருகே சென்று வேத பண்டிதர்களிடம் சிறப்பு ஆசி பெற்றனர்.

இக் கோவிலில் கருணாநிதி குடும்பத்தினர் இராகு-கேது சர்ப்ப தோஷ நிவாரண பூஜை நடத்துவதை அறிந்த ஊடகங்கள் மின்னல் வேகத்தில் வந்து படம் பிடித்தன.

இதனால் புகைப்பட நிபுணர்களுக்கும் இடையே கருணாநிதி குடும்பத்தினருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையறிந்ததும் வேத பண்டிதர்கள் அங்கு ஓடிச் சென்று இருதரப்பினருடனும் சமரச பேச்சுவார்த்தை நடத்தி அனுப்பி வைத்தனர். காளகஸ்தி கோவிலில் கருணாநிதி, கனிமொழி பெயர்களில் அவர்களது குடும்பத்தினர் பூஜை நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ஶ்ரீ-4)



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து பிரதமர் ஜான்கீயை ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் மன்மோகன்சிங் வரவேற்று அழைத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

# இங்கிலாந்திடம் இலங்கை 110 ஓட்டங்களால் தோல்வி



இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகின்றது. 3 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரை 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்தும் ஒரேயொரு இருபது-20 போட்டியை இலங்கையும் கைப்பற்றியிருந்தன. இந்நிலையில் 5 ஒருநாள் போட்டித்தொடரில் முதல் ஆட்டம் ஓவலில் நேற்று முன்தினம் பகல் இரவு ஆட்டமாக நடந்தது . இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆட்டம் மழையால் பாதிக்கப்பட 32 ஓவர்களாக போட்டி குறைக்கப்பட்டது.

இங்கிலாந்து அணி 32 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 229 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரரும், விக்கெட்காப்பாளருமான கிரேக் குவிஸ்வெட்டர் 61 ஓட்டங்களும், மோர்கன் 45 ஓட்டங்களும் எடுத்தனர். இலங்கை அணி தரப்பில் மலிங்க 3 விக்கெட்டும் லக்மல் 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

இலங்கை அணிக்கு 32 ஓவரில் 232 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஒரு ஓவருக்கு 7.15 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் இலங்கை விளையாடியது. இங்கிலாந்து வீரர்களின் அபாரமான பந்து வீச்சினால் இலங்கை விக்கெட்டுக்கள் மளமளவென்று சரிந்தன. இலங்கை அணி 27 ஓவரில் 121 ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் இலங்கை அணி 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியைத்தழுவியது. அதிகபட்சமாக 26 ஓட்டங்களை பந்து வீச்சாளரான மலிங்கதான் எடுத்தார்.

ராண்டீவ் 24 ஓட்டங்களை எடுத்தார்.

இங்கிலாந்து தரப்பில் அண்டர்சன் 4 விக்கெட்டும், சுவான் 3 விக்கெட்டும் கைப்பற்றினார்கள். ஜெயசூரிய தனது கடைசி ஒருநாள் போட்டியில் 2 ஓட்டங்களையே எடுத்தார் இந்தப் போட்டியோடு ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. 5போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 1:0 என முன்னிலை வகிக்கின்றது.

இத்தோல்வி குறித்து இலங்கை அணித்தலைவர் டில்சான் கூறுகையில், நாம் சிறப்பாக பந்து வீசவுமில்லை, சிறப்பாக துடுப்பெடுத்தாடவுமில்லை. இதுவே எமது தோல்விக்கு காரணம் என்றார்.

# இலங்கை– பிலிப்பைன்ஸ் கால்பந்து போட்டி சமநிலை

(கொழும்பு)

2014 உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்காக நேற்று நடைபெற்ற இலங்கை -பிலிப்பைன்ஸ் அணிகளுக்கிடையிலான முதலாவது தகுதிகாண் போட்டி சமநிலையில் முடிபடைந்தது.

கொழும்பு சுகததாஸ அரங்கில் நேற்று மாலை நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களை அடித்தன. இவ்விரு அணிகளும் ஜூலை 03 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் மீண்டும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளன (பீபா) தரவரிசையில் பிலிப்பைன்ஸ் உலகின் 155 ஆவது இடத்திலும் இலங்கை அணி 169ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## செல்லம்மா விஜயதர்மா



நீலிப்பந்தனை காரைநகரை பிறப்பிடமாகவும் 746, K.K.S. வீதி சிவலிங்கப்புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா விஜயதர்மா 29.06.2011 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி விஜயதர்மாவின் அன்பு மனைவியும், நடராசா, சுந்தரலிங்கம், பஞ்சலிங்கம், உஷா (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), முன்னேஸ்வரதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்வேஸ்வரதாசன், கோணேஸ்வரதாசன், டலஜா ஆகியோரின் சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.06.2011 இன்று வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியை இடம்பெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**செ.தனபாலசிங்கம் (மருமகன்)**
Apolo **வைத்தியசாலை,**
**வண். மேற்கு வைத்தியசாலை.**

(5447)

# இலங்கைப் பிரச்சினை...

இலங்கை தொடர்பான அவசர தீர்மானங்களை எடுக்கும் இயலுமை இல்லை என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். புதுடில்லியில் நேற்று நடைபெற்ற நீண்ட ஊடகவியலாளர் சந்திப்பிற்குப் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இலங்கை தமிழர்கள் தொடர்பிலான பிரச்சினைகள் மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து தான் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

எந்தவிதத்திலும் இலங்கை சம்பந்தமாக விசேட வழிமுறைகள் எடுக்கப்பட மாட்டாது என கூறிய இந்தியப் பிரதமர், இந்தியாவின் அயல் நாடுகளான பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுடனான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கமைய எதிர்காலத்திலும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை விஜயம் தொடர்பாக இவ்விரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகள் இணைந்து செயலாற்றி வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை விஜயத்திற்கான திகதி இதுவரை உறுதி செய்யப்படாத போதிலும் அவரின் கொழும்பு விஜயம் தொடர்பான பணிகள் இவ்விரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகளினால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை விஜயத்திற்கான திகதி இதுவரை முடிபாகவில்லை எனவும் இவ்விடயம் தொடர்பில் இருநாடுகளின் வெளிவிவகார அமைச்சுகளே செயலாற்றி வருவதாகவும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (எ)

# இலங்கை...

உன்னிப்பாக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனல் 4 ஊடக ஆவணப் படம் மற்றும் யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

பக்கசார்பற்ற சுயாதீன விசாரணைகளின் மூலம் மட்டுமே மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதில் மாற்று கருத்து கிடையாது.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் யதார்த்தமான விசாரணைகள் நடத்தப்பட்டு முடிபுகள் வெளியிடப்பட வேண்டும்.

முரண்பாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து அதற்கு ஏற்ற வகையில் வழங்கப்படும் அரசியல் தீர்வுத்திட்டம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வழிகோலும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# வவுணதீவில்...

5 கிலோ கிராம் நிறையுடைய ஒரு கைக்குண்டு, சீ 4 ரக வெடிபொருள் 1.8 கிலோக் கிராம், ரீ 56 ரக மகஸின்-5, ரீ 56 ரக ரவைகள் - 107, ரீ 56 ரக டுல்கிட்-1, 20 மீற்றர் நீளமுடைய வயர்ரோல், 3 சயனட் குப்பிகள், 4 கைக்குண்டு, விடுதலைப்புலிகள் இயக்கத் தகடு ஒன்று உள்ளிட்ட சில வெடிபொருட்கள், ஆயுதங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் வவுணதீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அரசியல்...

உரிமை ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையின் சிறைச்சாலைகளில் சுமார் 17ஆயிரம் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தரவுகள் வெளியாகியுள்ளன.

ஏற்கெனவே நாம் இலங்கையர் அமைப்பு காணாமல் போன மற்றும் கைது செய்யப்பட்டுள்ளோர் தொடர்பில் திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஆர்பாட்டங்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (எ)

# போர்க்குற்றச்சாட்டுத் தொடர்...

இறுதிக்கட்டத்தில் இராணுவமும் அரசாங்கமும் மேற்கொண்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களுக்கு புறம்பான போர்க்குற்றங்கள் தொடர்பில் கொழும்பு கடும் சர்வதேச நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது.

இந் நிலையில் சர்வதேச சமூகத்திற்கு சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் மேற்பார்வையின் கீழ் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் படைத்தரப்பின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த பணிப்பாளர் மேஜர் ஜெனரல் உதய பெரேராவால் இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் வடபகுதிக்கு உணவு மற்றும் மருந்து உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களை அனுப்பும் பொறுப்பு பசில் தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும், அதற்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் எவ்வித தொடர்புகளும் இருந்ததில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷ தலைமையிலான இக்குழுவில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் அதிகாரிகளும் உள்ளடக்கப்பட்டிருந்ததாக இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அரசாங்கம் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியதாக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் இக் குற்றச்சாட்டுகளுக்கு பசில் ராஜபக்சவே பொறுப்புக் கூறவேண்டும் என்ற தொனியில் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் சரணடைவது தொடர்பில் எடுத்த முடிபு குறித்து பசில் ராஜபக்ஷ 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி காலை தெரியப்படுத்தியதாகவும் ஆனால் இப் போரின் போது இருத்தரப்பினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்ததால் இத்தகவல்கள் உரிய நேரத்தில் கிடைக்கவில்லை எனவும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இத்தகவல் போர் முனையில் நின்ற படை அதிகாரிகளுக்கு கிடைத்தபோது போர் முடிபடைந்துவிட்டதுஎனவும்இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (எ)

# மனித உரிமை மீறலை...

மாறும் கொழும்புக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலன்ட்டிடம் கேட்ட கேள்விகளுக்கே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமைச் சட்டங்களுக்கு எதிராக இப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் காத்திரமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு.

இவ் விசாரணைகளை அரசாங்கம் மேற்கொள்ளத் தவறினால் சுயாதீனமான சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உலக நாடுகளுக்கு ஏற்படும்.

இதுகுறித்துநாங்கள்ஏற்கெனவே தெரிவித்திருந்ததைப் போல இலங்கையில் இடம்பெற்ற போரின் போது சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமைச் சட்டங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் முழுமையான, நம்பத்தகுந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு அமெரிக்கா முழுமையான ஆதரவினை வழங்கும்.

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடும் இலங்கை, போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை நிறைவேற்ற தயாராக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் வகையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கம் அவ்வாறு செய்யத் தவறினால், கொழும்பு மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார். (எ)





# 600 முன்னாள் போராளி...

பெரும்தொகையான முன்னாள் புலிகள் சமூகத்துடன் இணைக்கப்பட்டு உள்ளனர். மூவாயிரத்து 508 பேர் மட்டுமே இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் எஞ்சியுள்ளனர்.

அவர்களையும் கூடிய விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வார இறுதியில் மேலும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 600 பேர் அவர்களது உறவினர்களுடன் இணைக்கப்பட உள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளதுடன் தொழில்சார் கல்விகளும் வழங்கப் டுள்ளன.

சாதாரண வாழ்விற்கு திரு பியதன் பின்னர் இவர்கள் தம வாழ்வில் பொருளாதார பி சினைகளை சீர் செய்து கொள் முடியும் எனவும் அவர் தெரிவித் துள்ளார். (எ

# இந்திய உளவுத்துறையின் பேச்சை...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய உளவுத்துறையின் சதியே அதற்கான காரணம் என்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமான முன்னாள் இராணுவ ஜெனரல்கள் இருவருடன் தனிப்பட்ட முறையிலான உரையாடலொன்றை மேற்கொண்டிருந்த போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

ஜெனரல் சரத் பொன்சேகா குறித்து இந்திய உளவுத்துறை போலியான தகவல்களை வழங்கி என்னை தவறாக வழிநடத்திவிட்டது. அதன்பின்பு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக சரத் பொன்சேகா கூட்டுப்படைகளின் பிரதம அலுவலர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய முன்வந்த போது அவரது இராஜினாமாவை ஏற்றுக்கொண்டது அதனை விடப் பெரும் தவறாகும்.

சரத் பொன்சேகாவின் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளாதிருக்கும்படி பாதுகாப்புச் செயலர் கோதபாய ராஜபக்ஷ எவ்வளவோ வற்புறுத்தியும் இந்தியாவின் அழுத்தங்களை ஏற்றுக் கொண்டு அதனை நான் ஏற்றுக்கொண்டேன்.

அவ்வாறின்றி அவரது இராஜினாமாவை ஏற்றுக்கொள்ளாதிருந்தால் காலப்போக்கில் சரத் பொன்சேகாவுடன் இருந்த மனக்கசப்புக்களைத் தீர்த்துக் கொண்டிருக்க முடிந்திருக்கும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணத்தின் பின் சரத் பொன்சேகா புகழேணியின் உச்சத்துக்கு ஏறியிருப்பதாகவும், அதன் காரணமாக அவர் இராணுவ சதிப்புரட்சி மூலமாக அரசாங்கத்தைக் கைப்பற்ற முனைவதாகவும், அவ்வாறான சந்தர்ப்பத்தில் நாட்டில் பெரும்பாலானவர்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும். உளவுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு என்னை எச்சரித்த இந்திய அதிகாரிகள் பொன்சேகாவின் அதிகாரங்களை உடனடியாக மட்டுப்படுத்துமாறு ஆலோசனை வழங்கினர்.

அதன்பிரகாரம் செயற்பட்டே நான் சரத்பொன்சேகாவின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

இராணுவத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்திற்கு தலைமை தாங்கிவிட்டு, 2009ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி தனது பிறந்த நாளுடன் இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற சரத் பொன்சேகா தீர்மானித்திருந்தார். அதன் பின் பதவி நீடிப்பு தொடர்பில் கோரிக்கை முன்வைப்பதில்லை என்று அவர் என்னிடம் தெரிவித்திருந்தார்.

முரட்டுத்தனமானதும் தன்னிச்சையானதுமான போக்குகளைக் கொண்டிருந்த போதும் சரத் பொன்சேகாவின் ஆற்றல் மற்றும் அறிவு என்பவற்றுக்கு அருகில் நெருங்கவும் முடியாத நிலையிலேயே ஏணைய அதிகாரிகள் இருக்கின்றனர்.

வெளிநாட்டு அழுத்தங்கள் க மையாகிக் கொண்டிருக்கும் இ வாறான சந்தர்ப்பத்தில் அவரது விலகல் எனக்குப் பெரும் இழப்பாகவே இருக்கின்றது என்றவாறு கடந்தகால சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவலையுடன் அசைபோட்டுள்ளார்.

சரத் பொன்சேகா தொடர்பி ஜனாதிபதி இந்தளவுக்கு இறங் வரக் காரணம் அரசியல்வாதி சிலர் சரத் பொன்சேகா விடயத் மேற்கொண்ட தலையீடுகள்தா என்றவாறாக ஜனாதிபதிக்கு நெ கமான வட்டாரங்களிலிருந்து தெ வருகின்றது என்றுள்ளது.


## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வலம்புரியில் வெளியாகும்

'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

இற்கு கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அனுப்ப விரும்புவோர் எட்டு வரிக்கு மேற்படாதவாறு கவிதைகளை சுயமாக தயாரித்து பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

வலம்புரி

இல.3, 2ஆம் ஒழுங்கை,

பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்.



## உடன்தேவை

- கணினி தட்டச்சு செய்வதில் முன் அனுபவம் உள்ளவர் அல்லது திறமை உள்ளவர்.
- அச்சக வேலை தெரிந்தவர், பழக விரும்புபவர் நற்சான்றிதழுடன் வரவும்.

கற்சுமி வெளியீடு

166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(5446) 0718474325


# சமாதான சூழலை...

டொலர்களையும், யூரோக்களையும் சம்பாதித்துள்ள சிலர் முயற்சித்து வருகின்றனர்.

இவ்வாறானவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் ஒரு பிள்ளையோ அல்லது உறவினரோ இந் நாட்டில் இல்லை.

அவர்களின் குடும்பத்தினர் ஐரோப்பாவில் அல்லது இந்தியாவில் தான் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறானவர்களே இங்கு நிலவுகின்ற சமாதான சூழ்நிலையை சீர்குலைக்க முயற்சித்து வருகின்றனர்.

எத்தனையோ உயிர்பலிகளுக்கு மத்தியில் எமது படையினர் கொண்டு வந்த இந்த உன்னதமான சமாதானத்தை உங்களுக்கு வழங்கியுள்ளோம். அதனை நீங்கள் சிறந்த முறையில் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

நெருக்கடிகளுக்கு மத்தியில் கிடைத்த இந்த சமாதானத் நாங்களும் தக்கவைத்துக் கெ வேண்டும். இதில் சில குன கள் இருக்கலாம். இக் குன களை எல்லாம் நாம் நி செய்து எதிர்காலத்தில் நல்ல சூழ்நிலையை உருவாக்கு குறிக்கோளாக கொண்டுள்ே என அவர் தனது உரையில் தெ வித்துள்ளார்.

இந் நிகழ்வில் மீள்குடியேற் பிரதி அமைச்சர் விநாயகமூர்த் முரளிதரன், கிழக்கு மாகாண மு லமைச்சர் சிவநேசத்துரை சந்தி காந்தன், மீள் எழுச்சி திட்டப்பணி பாளர் லியனகே, மட்டக்களப் மாநகரசபை முதல்வர் சிவகீத பிரபாகரன், கிழக்கு மாகாண வி சாயத்துறை அமைச்சர் நவரட் ராசா, மாகாண மற்றும் மாநக சபை உறுப்பினர்கள் உட்பட ப கலந்து கொண்டனர்.





நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.

We Provide

* A Placement test which determines to which level of English you belong.
* Updated course modules
* Materials approved by British Council which are quite new including Cambridge 8
* 20 practice test * Free IELTS Pack & Mock Exams

| Course Schedule | Saturday & Sunday |
|---|---|
| Duration | 10 Weeks |
| Time | 2.00 p.m 5.00 p.m |
| Commencement | 02.July.2011 |

எமது கல்லூரிக்கு யாழ்ப்பாணத்தில் வேறு கிளைகள் இல்லை.

வகுப்புகள் 02.07.2011 ஆரம்பம்

CITY COLLEGE OF ENGLISH

143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)



## மாபெரும் மலிவு விற்பனை

அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணினிகள் மலிவு விலையில், உத்தரவாதத்துடன்

INTEL PENTIUM 4- 3.0 GHZ,
512 RAM, 80GB HDD,
DVD ROM, KEYBOARD, MOUSE
10,750/=மட்டுமே

LCD MONITOR கள் ரூபா.4,900/=ல் இருந்து
CRT MONITOR கள் ரூபா.2,900/=ல் இருந்

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur
Phone: 077 832 089 / 077 135 047 / 077 968 904


## நன்றி நவில

### அமரர் அம்பிகாவதி கந்தைய

(ஓய்வு பெற்ற ஆசிரியை சேர்.வை.து.ம.ம.வித்தியால அவர்கள் இறையடி சேர்ந்த பொழுது தொலைபேசி மூல தந்தி மூலமும் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத் தெரிவித்தோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் புரிந்தவர்களுக்கும் குறிப்பாக உடன்கற்பித்த ஆசா களுக்கும் நோய்வாய்ப்பட்டிருந்தபோது தேவையான ச உதவிகள் புரிந்தோருக்கும் வைத்தியர்களுக்கும் எம் மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

59/12, பொற்பதி வீதி,
கொக்குவில்

குடும்பத்தினர்

(5440)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட